
என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

FREE ISSUE

லண்டன்
# தமிழர் தகவல்
June 2014

London Tamil's Information




## உள்ளாட்சி தேர்தலில் 10 தமிழர்கள் வெற்றி!




ஆம் ஆண்டு தொடக்கத்தில்

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


லண்டனில் No1
நகை மாளிகை
Lakshmis
Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை



Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Niru BRAND®
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்


பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2045

நந்தன - வைகாசி

மலர் : 12

இதழ் : 133

ஜீன் - 2014



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்



தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!

**ஆனி உத்தரத் தேர் திருவிழா**
**ஜீலை மாதம் 4ஆம் திகதி**
**சிதம்பரத்தில் நடைபெறுகிறது.**


தங்கம் என்று நினைத்ததும்
நினைவுக்கு வர வேண்டிய பெயர்

Tharani Jewellery

54 Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777




வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!

சிவமயம்

Brittania Hindu (Shiva) Temple Trust

# Highgatehill Murugan Temple

200 A Archway Road, London N 6 5BA

# உயர்வாசற்குன்று முருகன் கோயில்







## பிரமோற்சவம்

2014

| | | |
|---|---|---|
| 22.06.2014 | ஞாயிறு காலை 09.30 மணி | – கணபதி ஓமம் |
| 23.06.2014 | திங்கள் காலை 11.30 மணி | – கொடியேற்ற வைபவம் Flag Hoisting Ceremony |
| | திங்கள் மாலை | – திருவிழா |
| 30.06.2014 | திங்கள் மாலை - 08.00 மணி | – கைலாய வாகனம் |
| 01.07.2014 | செவ்வாய் மாலை - 05.15 மணி | – மாம்பழத் திருவிழா |
| 02.07.2014 | புதன் மாலை - 08.00 மணி | – மஞ்சத்தில் வீதி உலா |
| 04.07.2014 | வெள்ளி காலை - 05.00 மணி | – ஆனி உத்தரம் |
| | மாலை 5.15 மணி | – வேட்டைத் திருவிழா |
| 05.07.2014 | சனி மாலை - 08.00 மணி | – சப்பரத்தில் வீதி உலா |
| 06.07.2014 | ஞாயிறு காலை - 11.00 மணி | – சுவாமி தேரேரி வீதி உலா வருதல் Chariot Festival |
| 07.07 2014 | திங்கள் காலை 10.00 மணி | – தீர்த்த உற்சவம் |
| | மாலை 08.00 மணி | – கொடி இறக்கம் |
| 08.07.2014 | செவ்வாய் மாலை 07.00 மணி | – திருக்கல்யாண விழா பொது உபயம் |
| 09.07.2014 | புதன் மாலை 07.00 மணி | – வைரவர் மடை |

Tel : 020 8348 9835

Email : admin@highgatehillmurugan.org
Web : www.highgatehillmurugan.org

VAANI Foods

லண்டனில் அதிக அளவில்
பருப்பு வகைகள்
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை
செய்பவர்கள்




தயாரிப்பாளரிடமிருந்து
நேரடியாக வாடிக்கையாளருக்கு






## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்வின் 5ஆம் ஆண்டு நினைவெழுச்சி நிகழ்வு இலண்டனில் நடைபெற்றது.




Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி

# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**








# Need A Policy?



Our Protection plans offer excellent protection for your loved ones and for yourself.

**Accident Protection**
**Income Protection**
**Life Cover**
**Critical Illness**



**For more detailed information & one to one advice**
**Please contact – Mr. SUTHA Consultant**

**Tel: 0844 887 1664 Mob: 07947 471 529**
**E-mail: mahasutha@live.co.uk**

லண்டனில் 21வது ஆண்டாக ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின்

# கானக்குயில் - 2014

# KAANAKKUIL - 2014

**28.06.2014 சனிக்கிழமை மாலை 6 மணி - 11 மணி**

GREEN FORD ASSEMBLY HALL, RUISLIP ROAD, GREEN FORD, MIDDX UB69 QN



ஆதரவு வழங்குவோர்:

Ayngaran Intenational, Tharani Jewellery, Ratna & Co Solicitors, Dr.London Baba Suresh Krishna, Veeka Autos, A-Lanka Travells ltd., Rathy Jewellers, Thinesh Jewellers, Abi Fast Food (Southall & Suthharrow) And Lilley Sports

சித்திராலயா இசைக் குழுவின் பின்னணி இசையில் 22 போட்டிப் பாடகர்கள் பாட உள்ளார்கள். அத்தோடு கடந்த ஆண்டுகளில் வெற்றி பெற்ற 12GUEST SINGERSம் பாடி மகிழ்விப்பார்கள்.

பார்வையாளர்கள் வாக்குகளால் பாரபட்சமின்றி 'கானக்குயில்' போட்டியில் வெற்றிபெறுவோர் தேர்வு செய்யப்படுவர்.

**ABI FAST FOOD**
**(SOUTH HALL & SHOUTH HARROW)**
சுடச்சுட உணவு வழங்குகிறார்கள்.
ஒலி அமைப்பு: Soorya Sound

ரிக்கெற்: ADULTS - £15, VIP - £25, **12வயதுக்குட்பட்டோர் - £10.**

மண்டப வாசலில் டிக்கட் பெற்றுக்கொள்ளலாம்.

பார்வையாளர்கள் வீடியோ, SMART PHONE இல் படம் பிடிக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

விபரங்களுக்கு : 020 3489 8309, 0790 332 7708 · வெம்பிளி தாரணி ஜுவல்லரியில் ரிக்கெற் பெற்றுக் கொள்ளலாம்.



## கீரிமலை நகுலேஸ்வர ஆலய இராஜகோபுர திருப்பணி நிதிக்காக

# சாருலதா மணி

வழங்கும்

# இன்னிசைக்கச்சேரி

*On*

**SATURDAY, 14TH JUNE 2014, 6:30PM**

*At*

**HAINAULT FOREST HIGH SCHOOL**

Harbourer Road, Off New Road, Hainault, Ilford, IG6 3TN


Violin : Dr Jyotsna srikanth - Miruthangam : M.Balachandar
Morsing / Tabla : K.Sithamparanathan

*Donations / Entry*

**£50.00 Special row - £25.00 front stall (admit two) - £15.00 single**

For Further Details

Dr.Navaratnam : 07956 579239 - Dr.Sivakumar : 07788 415927 - Thamboo : 07861 393295 - Ram : 07956 369557
Gugan : 07956 800405 - Jeyakumar : 07767764958 - Kugarajah : 07952 506778 - Kamalakannan : 07946 303627



# திருமுறைகளே சைவத்தின் ஆதாரம்!

"நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க!
ஏகன் அனேகன் இறைவ னடிவாழ்க!"

என்று திருமுறைகளுள் ஒன்றான திருவாசகத்தைப் பண்ணோடு பாடினால், சாமானிய மனிதரே மகுடிக்கு மயங்கிய பாம்புபோல் ஆகிவிடுவர் எனும்போது, சைவத்தின் தலைவன் நமச்சிவாயத்தின் உள்ளம் உருகாமல் போகுமோ?

"வான்கலந்த மாணிக்க
வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாந்நினிலே
தேன்கலந்து பால்கலந்து
செழுங்கனித்தீஞ் சுவைகலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து
உவட்டாமல் இனிப்பதுவே"

என்று இராமலிங்க அடிகள் உருகிய திருவாசகத்திற்கு ஈடு இணை உண்டா? 'சொற்றமிழால் எம்மைப் பாடுக' என மூதாட்டி அவ்வையிடம் கேட்டவனல்லவா கைலாய நாதன். அதனால்தான், சைவ சமயக் குரவர் நால்வரும் பதிகங்களால் இறைவனைப் பாடினார்கள்.


அவர்கள் தந்தருளிய பன்னிரு திருமுறைகளும்தான், நம் சைவ சமயத்தின் அடிநாதமாக இருப்பவை. அத்தனையும் தெள்ளுதமிழில், பண்ணோடு பாட வேண்டிய பதிகங்கள். இவைகளின்றி, சைவம் இல்லை. எனவேதான், சைவக் கோயில்களில், ஓதுவார்களை நியமித்து, திருமுறைகளைப் பண்ணோடு பாடச் செய்து வழிபடும் மரபு ஏற்படுத்தப்பட்டது. சைவத்தின் பெருமைக்குரியவை திருமுறைகள்.

திருமுறைகளைப் பாடி, பல அதிசயங்களை இறைவன் அருளால் நிகழ்த்திக் காட்டினர் அந்நால்வரும். அரவம் தீண்டிய சிவ பக்தரின் பிள்ளையைப் பதிகம் பாடி உயிர்த்தெழச் செய்தார் அப்பர் அடிகள். சம்பந்தரும், அப்பரும் பதிகங்கள் பாடி, திருமறைக்காட்டில் கோயில் நுழைவாயிலைத் மூடியும் திறந்தும் நிகழ்த்திய அதிசயங்களைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். சமற்கிருத மந்திரங்கள் சைவத்திற்குத் தூரமானவை. செந்தமிழில் உள்ள பதிகங்களே சைவ வழிபாட்டுக்குரியவை என்பதை, நாம் மறந்துவிடக் கூடாது.

இங்கே லண்டனில் பல சைவக் கோயில்களில் திருமுறைகள் பாடுவதற்கு ஓதுவார்கள் இல்லாத நிலையைக் காண்கிறோம். ஒன்றிரண்டு கோயில்களைத் தவிர, மற்ற கோயில்களில் ஓதுவார்கள் இல்லை. திருமுறைகளை மனப்பாடம் செய்து யார் வேண்டுமானாலும் ஒப்புவிக்க முடியும். ஆனால், அது எந்தப் பலனையும் தராது. இசையோடு பாடினால் மட்டுமே அது இறைவனைச் சென்றடையும். எனவே, ஓதுவார்கள் இல்லாத சைவக் கோயில்களில் உடனடியாக அவர்களை நியமித்து, திருமுறைகள் ஒலிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதைத் தமிழர் தகவல் பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்!

இப்போது, திருமுறைகளுக்கு விழா எடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம். திருமுறை விழா சிறப்போடு நடைபெற தமிழர் தகவல் இறைவனை வேண்டிக் கொள்கிறது. இந்த நல்ல நிகழ்வின் தொடர்ச்சியாக, ஒவ்வொரு சைவக் கோயில்களிலும் ஓதுவார்களை நியமித்து, திருமுறைகளைப் பண்ணோடு பாடி, எம்பெருமான் சிவனின் அருளை அனைவரும் பெற ஏற்பாடு செய்யப்படுமானால், தமிழர் தகவல் மகிழ்வோடு நன்றி சொல்லக் காத்திருக்கிறது.

# தொண்டுகளால் புகழ்பெற்ற மகாஜனாவின் தயாளன்



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழுக்குரிய பழைய மாணவர் திரு வைத்தீஸ்வரன் தயாளன் அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் கிங்ஸ்ரன் கவுன்சில் உறுப்பினராகத் தெரிவாகியுள்ளார். லிபரல் ஜனநாயகக் கட்சின் உறுப்பினரான இவர் தெல்லிப்கழையைப் பிறப்பிடமாகக் கெண்டவர். தமிழரசுக்கட்சி ஆரம்பித்த காலத்தில் அதன் அங்கத்தவராகச் செயற்பட்டவரும் காந்தீயவாதியுமான திரு வைத்தீஸ்வரனின் மகன். தமிழ்த தேசியத்தில் தீவிர பற்றும் அக்கறையும் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்த திரு தயாளன் அவர்களின் சகோதரர்கள் தமிழரசுக் கட்சியிலும் தமிழர்விடுதலைக்கூட்டணியிலும் பொதுக்குழு உறுப்பினர்களாக விளங்கியவர்கள்.

தனது கல்லூரியான மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் ஆரம்பகாலம் தொடக்கம் கடந்த 27 வருடங்களாகச் செயற்பட்ட இவர் ஆறு ஆண்டுகள் தலைவராகவும் நான்கு ஆண்டுகள் செயலாளராவும் கடமையாற்றியதுடன் தற்போது அதன் காப்பாளர்களில் ஒருவராகக் உள்ளார். தான் வதியும் கிங்ஸ்ரனில் நண்பர்களுடன் இணைந்து ஒரு தமிழ்ப் பாடசாலையை 28 ஆண்டுகளிற்கு முன் ஆரம்பித்து சிறப்பாக நடக்க வேண்டிய அனைத்தையும் செய்தார். அதனுடைய பல்வேறு பொறுப்புக்களில் செயற்பட்ட இவர், அதனை ஒரு கட்டமைப்பான நிறுவனமாக நிலைநிறுத்தக் காரணமானவர்.

இந்த மண்ணில் கடந்த 23 ஆண்டுகளாக நல்ல முறையில் செயற்பட்டுவரும் தமிழ்ப்பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் ஆரம்பகாலத்தில் அதன் செயலாளராகச் செயற்பட்டு ஸ்திரமாகச் செயற்படுவதற்குக் காரணமானவர்களில் ஒருவர். இங்கே நடைபெறுகின்ற கலை நிகழ்வுகள், அரங்கேற்றங்கள் இவரின் பங்களிப்பில்லாமல் நடைபெற்றதில்லை எனலாம்.

உதவிகள் தேவைப்பட்ட இடங்களுக்கெல்லாம் வலியவே சென்று உதவி செய்திடும் நல்ல உள்ளம் கொண்ட திரு தயாளனின் படத்தை அட்டையில் பிரசுரித்துக் கௌரவிப்பதில் 'தமிழர் தகவல்' பெருமைப்படுகின்றது.


## மேயராக கௌரவம் பெறும் கவுன்சிலர் கண. நகீரதன்

பிறன்ற் கவுன்சிலின் தொழிற்கட்சி உறுப்பினரான திரு கணபதிப்பிள்ளை நகீரதன் அவர்கள் அதன் நடப்பு வருட மேயராகக் கௌரவம் பெறுகின்றார்.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவரான இவர் அதனது பழைய மாணவர் சங்கத்தை இங்கு உருவாவதற்குக் காரணமானவர்களில் ஒருவர். தமிழ்ப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தின் நிருவாகத்திலும் செயற்பட்ட திரு நகீரதன் அவர்கள் பெறும் இக்கௌரவத்திற்காக அவரைத் 'தமிழர் தகவல்' பாராட்டுகின்றது.



தி.மு.க். தலைவர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் தனது 91வது பிறந்தநாளை கொண்டாடியுள்ளார். கொள்கை மிக்க இயக்கத்தை கட்டுக்கோப்பாக வழிநடத்துவதில் கலைஞர் முன்னோடி... அவரின் பணிகள் தொடரட்டும் என தமிழர் தகவல் வாழ்த்துகிறது.



# வாழ்த்துகிறோம்

## வைத்தியலிங்கம்

**செல்லதுரை அவர்கள்**

**தனது 90ஆவது பிறந்தநாளை தனது இல்லத்தில் சிறப்பாக கொண்டாடினார். சிறப்புடன் பல்லாண்டுகள் வாழ வைத்தியலிங்கம் செல்லதுரையை தமிழர் தகவல் வாழ்த்துகிறது.**



# பா.ஜ.கவின் இந்த வெற்றியைச் சாத்தியமாக்கியவர்கள்

**அ.மார்க்ஸ்**

பா.ஜ.கவின் இந்த அமோக வெற்றிக்குப் பின் கார்பொரேட்களும் ஊடகங்களும் இருந்தன என்பது ஊரறிந்த உண்மை. நேரடியான நிதி உதவிகள் தவிர, அவையே களத்தில் இறங்கிக் கட்சிகளிடம் பேரம் பேசிக் கூட்டணி அமைத்தது, மாநில மொழிப் பத்திரிகைகளை விலைக்கு வாங்கியதுவரை அவை செய்யாதது ஏதுமில்லை. பா.ஜ.கவின் தேர்தல் செலவு மொத்தம் 5000 கோடி என்கின்றனர். மோடி தலைமையில் பா.ஜ.கதான் வெல்லப்போகிறது, அதைத் தவிர வேறு தேர்வே மக்களுக்கு இல்லை என ஒவ்வொருவர் வீட்டிற்குள்ளும் வந்து தட்டி எழுப்பி ஊடகங்கள் நிமிடந்தோறும் காதுக்குள் முணுமுணுத்துக் கொண்டிருந்தன. உலகப் பொருளாதார வீழ்ச்சி தொடங்கி தாணே புயல்வரை காங்கிரஸ் கட்சிதான் காரணம் என்றும் மக்கள் நம்ப வைக்கப்பட்டனர்.

இவை அனைத்தும் உண்மைதான் என்றாலும் பா.ஜ.கவின் வெற்றிக்கு இவை மட்டுமே காரணம் என எதிர்க் கட்சிகள் நம்பினால் அவர்களைப் பார்த்துப் பரிதாபப்படத்தான் முடியும்.

முதலில் எதிர்க் கட்சிகள் சில உண்மைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். மக்கள் மிகவும் ஆர்வமாக இந்தத் தேர்தலில் பங்கேற்றுள்ளனர். 63.8 சத வாக்குப் பதிவு வரலாறு காணாதது. பா.ஜ.க இந்தி பேசும் மக்கள் வாழும் மாநிலங்களில் மட்டுமே உள்ள கட்சி , பார்ப்பன, சத்திரிய மேட்டுக்குடி மக்களின் கட்சி என்பன போன்ற விமர்சனகளுக்கும் இந்தத் தேர்தல் முற்றுப்புள்ளி வைத்துள்ளது. கிழக்கு மற்றும் வட கிழக்கு மாநிலங்களிலும் அவர்கள் இன்று வேர் பாய்ச்சி விட்டனர். இமாசலப் பிரதேசம் முதல் கர்நாடகம் வரை அவர்களின் அலை வீசியுள்ளது. மோடி ஒரு பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்தவர் என்கிற தகவலை மூடி மறைக்காமல் அதையே முன்னிறுத்தி இந்த வெற்றியை அவர்கள் ஈட்டியுள்ளனர்.

தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், முஸ்லிம்கள் ஆகியோரை இணைத்து பகுஜன் என்கிற கருத்தாக்கத்தை முன்வைத்த கான்ஷிராமுடைய அணுகல்முறை இன்று தகர்க்கப்பட்டு விட்டது. இதைத் தலை கீழாக

மாற்றிய குருவை மிஞ்சிய சிஷ்யை மாயாவதியின் பார்ப்பனர் + சத்திரியர் + பிற்படுத்தப்பட்டோர் + பட்டியல் சாதியினர் என்கிற "வெற்றிக் கூட்டணியை" இன்று உண்மையிலேயே காரிய சாத்தியமாக்கியவர்களாக பா.ஜ.கவினரே உள்ளனர். ஆக புவியியல் ரீதியிலும் சரி, சமூக ரீதியிலும் சரி பரந்துபட்ட ஒரு கட்சியாக அது விசாலித்து நிற்கும் உண்மையை நாம் முதலில் கணக்கில் எடுத்துக் கொள்வோம்.

இந்த வெற்றிக்குப் பின்னணியாக யார், யார் இருந்துள்ளனர்? 1. முதலில் வாக்களித்த மக்கள். 55 கோடி வாக்காளர்களில் சுமார் 10 கோடிப் பேர் புதியவர்கள். உலகமயம், திறந்த பொருளாதாரம், கார்பொரேட் கலாச்சாரம் ஆகியன வேர்விட்ட பின் பிறந்த குழந்தைகள். வாக்காளர்களின் இன்னொரு பெருந் தொகுதி வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கம். இவர்களுக்கு வளர்ச்சி, வளர்ச்சியின் பலன்கள் ஆகிய ஒன்று மட்டுமே இலக்கு. வரலாறு, இலக்கியம், சமூகவியல் என்பதெல்லாம் இன்று கல்வி நிலையங்களிலும் கூடப் புறக்கணிக்கக் கூடிய பாடங்கள் ஆகிவிட்டன. சமத்துவம், ஜனநாயகம், பன்மைத்துவம் ஆகிய அரசியல் அறங்களின் இடத்தில் இன்று 'வல்லவன் வெல்வான்" என்கிற கார்பொரேட் அறம் கொடி கட்டிப் பறக்கிறது இதை முழுமையாக உள்வாங்கியுள்ளவர்கள் இந்தத் தலைமுறையினர்

இவர்களிடம் போய், "குஜராத்தில் 2002ல் 2000 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர், 2 லட்சம் பேர் உள் நாட்டிலேயே அகதிகளாயினர். இதற்கெல்லாம் காரணம்...." எனத் தொடங்கினீர்களானால், "அட, இந்தக் கதையெல்லாம் யாருக்கு சார் வேணும். உலகம் எங்கே போய்க் கொண்டிருக்கிறது..." என்று பதிலளிப்பார்கள்.

மதிப்பீடுகள் இன்று பெரிய அளவில் மாறிவிட்டன. முந்தைய தலைமுறையினரின் அரசியல் மொழி இன்றைய தலைமுறையினரிடம் எடுபடவில்லை. பகுத்தறிவு, மதச்சார்பின்மை, மார்க்சீயம், சாதி ஒழிப்பு முதலிய அரசியல் மதிப்பீடுகளினிடத்தில் இப்போது மதம் சார்ந்த அறங்கள், நம்பிக்கைகள், சுய முன்னேற்றத்தை நோக்கிய விழைவு முதலியன இடம்பிடித்துக் கொண்டுள்ளன. இதை நாம் முதலில் மனங்கொள்வோம்.

இவர்களுக்கு ஊழலற்ற, சாதித்துக் காட்டுகிற ஆட்சி வேண்டும், செயல்படும் அரசு எந்திரம் வேண்டும். எல்லை தாண்டிய பயங்கரவாதம் சாத்தியமில்லாத அளவிற்கு இந்நாடு அண்டை நாடுகள் மத்தியில் தன்னை உறுதி செய்து கொள்ள வேண்டும். "போலீஸ் ஸ்டேஷகளில் உங்களுக்கெல்லாம் என்னுடைய ஆட்சிக் காலத்தில் எத்தனை மரியாதை இருந்தது, மீண்டும் லாலு ஆட்சியை நிறுவுங்கள்" என லாலு பிரசாத் யாதவ் முழங்கிய முழக்கத்தை பீஹாரிகள் நிராகரித்து விட்டனர். அவரது மனைவி, மகள் இருவருமே படு தோல்வி அடைந்துள்ளனர். குடும்பப் பெருமை வாரிசு அரசியல், ஊழல் பின்புலம் இவற்றின் மூலம் இனி மோடி, பா.ஜ.க வகை அரசியல்வாதிகளை எதிர் கொள்ள இயலாது.

திரிபுராவில் தம் பிடியைத் தக்கவைத்துக் கொண்ட மார்க்சிஸ்டுகளால் மே.வங்கத்தைத் தக்க வைக்க இயலவில்லை. அவர்களது முப்பதாண்டு கால ஆட்சி அங்குள்ள 25 சத முஸ்லிம்களின் வாழ்க்கையில் விளக்கேற்ற இயலவில்லை என்பதை அந்தக் "குள்ள நீதிபதி" (சச்சார்) அம்பலப் படுத்தினார். அரசாங்கத்தைக் காட்டிலும் அங்கு மார்க்சிஸ்ட் கட்சி ரேஷன் கடை,, போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் ஆட்சி செலுத்தியதை இன்றைய தலைமுறை ஏற்கவில்லை. மக்களையும் விடக் கட்சியே சரியானது, உயர்ந்தது என்கிற அவர்களின் நூறாண்டு வரலாற்றுச் சுமையை உதறாதவரை அவர்களுக்கு விடிவில்லை.

2.பா.ஜ.கவின் இந்த வெற்றியைச் சாதகமாக்கிய இரண்டாவது தரப்பு அவர்களுக்குப் பின்புலமாக உள்ள ஆர்.எஸ். எஸ் அமைப்பினர். மாறியுள்ள இந்த உலகச் சூழலையும் கருத்தியல் நிலையையும் அவர்கள் மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். ரோம் பற்றி எரிந்தபோது பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னனுடன் நீதி மன்றத்தால் ஒப்பிடப்பட்ட மோடியையே அவர்கள் சர்வ வல்லமையாளனாக முன்னிறுத்தி வெற்றியையும் ஈட்டினர். தொடர்ச்சியாகவும் இறுக்கமாகவும் அமைதியாகவும் அவர்களின்

பணி இந்தியத் தீபகற்பம் முழுவதும் மட்டுமல்ல அந்தமான் தீவுகள் வரைக்கும் பரவி இருந்தது. கல்விப் பணி தொடங்கி வெடி குண்டுத் தாக்குதல்கள் வரைக்கும் அவர்கள் தொலை நோக்குத் திட்டங்களுடன் செயல்பட்டனர். இராணுவம் தொடங்கி சகல துறைகளிலும் அவர்கள் ஊடுருவினர். பிற்படுத்தப்பட்டோர் பழங்குடியினர் ஆகியோரை சிறுபான்மை மக்களிடமிருந்து பிரித்து எதிர் எதிராக நிறுத்துவதை இலக்காக்கிச் செயல்பட்டனர். இவற்றை எதிர்கொள்வதை முன்னுரிமையாக்கிச் செயல்பட மதச் சார்பற்ற கட்சிகள் எதுவும் தயாராக இல்லை. மாறாக அவர்களைக் கண்டு அஞ்சவே செய்தனர்.

3. பா.ஜ.க வெற்றியின் பின்னணியாக இருந்த மூன்றாவது தரப்பினர் கார்பொரேட்கள். எப்படி மோடி என்கிற ஒரு பிற்படுத்தப்பட்ட சாதியரை முன்னிறுத்தினாலும் பா.ஜ.க தம் நலனை விட்டுக் கொடுக்காது என உயர் சாதியினர் முழுமையாக அதற்குப் பின் நின்றனரோ, அதேபோல மன்மோகன் சிங் சோனியா ஆட்சியைக் காட்டிலும் மோடி பா.ஜ.க ஆட்சி இன்னும் உறுதியாகத் தாராள மயக் கொள்கையை நிறைவேற்றும் என கார்பொரேட்கள் உறுதியாக நம்பினர். எச்ச சொச்சமாகவேனும் நேரு காலத்திய சோசலிசத் தொங்கல்கள் ஒட்டிக் கொண்டுள்ள காங்கிரசால் சிறு வணிகத்தில் அந்நிய முதலீடு போன்ற அம்சங்களிலும், கனிம வளங்களைக் கொள்ளையடித்தல், விவசாய நிலங்களை அபகரித்தல் முதலான அம்சங்களிலும் உறுதியான நடவடிக்கை எடுக்க இயலவில்லை எனக் கருதினர்.

ஜனநாயக சக்திகளைக் காட்டிலும் கார்பொரேட்கள் வலதுசாரி பாசிச சக்திகளிடமே நெருக்கமாக இருப்பர். சென்ற நூற்றாண்டின் தொடக்க காலத்திய செவ்வியல் பாசிசத்தின் போது ஹிட்லர் மற்றும் முசோலினியின் கட்சிகளும் பெரு முதலாளிகளும் ஒன்றாக இருந்தனர். இந்தியாவில் பெரு முதலாளிகள் இது நாள் வரை காங்கிரசுடன்தான் இருந்தனர். இன்று கார்பொரேட்களும் இந்துத்துவ சக்திகளும் இணைந்துள்ளனர். ஆக பாசிசம் இன்று முழுமை அடைந்துள்ளது.

இந்த எதார்த்தங்களைக் கணக்கில் எடுக்காதவரை பாசிச சக்திகளிடமிருந்து நாட்டை விடுவிக்க இயலாது.

இன்றும் கூட 31 சத வாக்குகளைத்தான் பா.ஜ.க பெற முடிந்துள்ளது. நமது தேர்தல்முறை அவர்களுக்கு இந்த அமோக வெற்றியைச் சாதகமாக்கியுள்ளது. 15 சதச் சிறுபான்மையினர் அவர்களிடமிருந்து முற்றாக விலகி நிற்பது மட்டுமின்றி இந்த வெற்றியைக் கண்டு சற்றே பதற்றத்திலும் உள்ளனர். பா.ஜ.கவினருக்கு வாக்களித்தவர்கள் எல்லோருமே இந்துத்துவவாதிகள் அல்ல என்பதையும் நாம் மனங்கொள்ள வேண்டும்.

குஜராத் 2002 ஐ அவர்கள் திருப்பிச் செய்வார்கள் என நாம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. அப்படிச் செய்தால் எந்தப் புதிய சக்திகள் இன்று ஆதரித்து நிற்கின்றனரோ அவர்களே வளர்ச்சி எனும் நோக்கத்திற்கு இது பொருத்தமில்லாதது என அவர்களிடமிருந்து விலக நேர்வர். மாறாக இந்துத்துவ சக்திகள் தொலை நோக்குடன் செயல்பட்டு இந்த நாட்டின் எதிர்காலத் தலைமுறை, இராணுவம், அரசு எந்திரம் ஆகியவற்றைக் காவி மயமாக்குவதை நுணுக்கமாகவும் வேகமாகவும் செய்வர். இவர்களை ஆதரிக்கும் புதிய சக்திகள் இவற்றைக் கண்டு கொள்ளவும் மாட்டார்கள்.

இதைப் புரிந்து கொண்டு மதச் சார்பற்ற சக்திகள் அடுத்து வரும் நாட்களில் செயல்படவேண்டும் இந்த நாட்டின் முதன்மை எதிரி மதவாத சக்திகள்தான் எனப் புரிந்து கொண்டு மதச் சார்பற்ற சக்திகள் ஓரணியில் திரள்வதும், மதச்சார்பு நடவடிக்கைகளையும் ஊடுருவல்களையும் கவனமாகவும் உறுதியாகவும் எதிர்கொள்வதும் இன்றைய உடனடித் தேவை. இன்னொரு பக்கம் பழைய மொழி, பழைய அணுகல் முறை, பழைய வடிவம் ஆகியவற்றையும் இவர்கள் உதறத் தயாராக வேண்டும்.

இல்லையேல் இந்த நாட்டிற்கு மட்டுமல்ல அவர்களுக்கும் எதிர்காலமில்லை.

## லண்டன் மற்றும் புறகர் பகுதி உள்ளாட்சி தேர்தலில்

# 10 தமிழ் வேட்பாளர்கள் வெற்றி!

## வெற்றி பெற்ற தமிழர்களைத் தமிழர் தகவல் வாழ்த்துகிறது

### அவர்களின் மக்கள் பணி செவ்வனே தொடரட்டும்

லண்டன் மற்றும் அதன் புறநகர் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மே 22இல் நடைபெற்ற தேர்தலில் கனகசபாபதி நகீரதன், மைக்கல் செல்வநாயகம், சசிகலா சுரேஸ், கிருஸ்ணா சுரேஸ், போல் சத்தியநேசன், தவத்துரை ஜெயரஞ்சன் ஆகியோர் தொழிற்கட்சியில் இருந்தும்; யோகன் யோகநாதன், தயா தயாளன், எலிசா பாக்கியவதி மஅன் ஆகியோர் லிபிரல் டெமொகிரட் கட்சியில் இருந்தும் கஜன் வேலுப்பிள்ளை கொன்சவேடிவ் கட்சியில் இருந்தும் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

கடந்த உள்ளாட்சித் தேர்தலின் பின்னர் லேபர் பார்ட்டியில் ஹரோ உள்ளாட்சி மன்ற கவுன்சிலர்கள் ஒரு குழவாகப் பிரிந்து செயற்பட்டனர். ஆதனால் கொன்சவேடிவ் உள்ளாட்சி மன்றத்தைக் கைப்பற்றியது. லேபர் கட்சியில் ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் கவுன்சிலர்களாக செய்யப்பட்ட தயா இடைக்காடர்› மனோ தர்மராஜா இருவரும் லேபர் பார்ட்டியில் இருந்து பிரிந்து சென்றனர். இத்தேர்தலில் இருவரும் அதற்கான விலையைச் செலுத்தனர். இருவருமே இத்தேர்தலில் கவுன்சிலர்களாகத் தெரிவு செய்யப்படவில்லை.

கொன்சவேடிவ் பார்டியில கடந்த தேர்தலில் வெற்றி பெற்ற லோகேந்திரன் செல்லையா இம்முறை தோல்வியைத் தழுவினார்.

தயா தயாளன் லிபரல் டெமொகிரட்டில் கிங்ஸ்ரன் – றொல்வேர்த்திலும் கஜன் வேலுப்பிள்ளை கொன்சவேடிவ் கட்சியில் கிங்ஸ்ரன் – கூம்பே ஹில் இல் இருந்தும் முதற்தடவையாக வெற்றி பெற்றுள்ளனர். இவ்விருவருமே புதுமுகங்கள்.

கவுன்சிலர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்:

**ஜெயரஞ்சன் தவத்துரை**
லேபர் றெட்பிறிஜ்—நியூபரி

**போல் துரைசாமி சத்தியநேசன்**
லேபர்—நியுஹாம்—ஈஸ்றஹாம் நோர்த்

**மைக்கல் செல்வநாயகம்**
லேபர் குரொய்டன் — புரோட்கிரீன்

**கண நகீரதன்**
லேபர் — பிரன்ட் — குயின்ஸ்பரி

**எலிசா பாக்கியவதி**
மஅன் லிபிரல் டெமொகிரட் சதேக்—ரிவர்சைட்

**சசிகலா சுரேஸ்**
லேபர்—ஹரோ—ஹெட் ஸ்ரோன்

**கிருஸ்ணா சுரேஸ்**
லேபர்—ஹரோ—ரெய்னர்ஸ் லேன்

**கஜன்வேலுப்பிள்ளை**
கொன்சவேடிவ் கிங்ஸ்ரன்—கூம்பே ஹில்

**யோகநாதன் யோகன்**
லிபரல் டெமொகிரட்—கிங்ஸ்ரன்—சென்மார்க்


**தயாளன் தயா**
லிபரல் டெமொகிரட்— கிங்ஸ்ரன்—றொல்வேர்த்அன்ஹுக் ரைஸ்

நுணாவிலூர் **கா. விசயரத்தினம்**

# கல்வியின் வருங்காலம்

பழந்தமிழ்ச் சான்றோர்கள் அறவியலும்,; அறிவியலும் சார்ந்த ஒரு வாழ்வியலைத் தமக்கென வகுத்துக் கொண்டனர். இல்லறம் ஒன்றே இயற்கை வாழ்வெனக் கண்ட பழந்தமிழர்கள் வாழ்வியலை அகம், புறம் என இரு கூறாகப் பகுத்தனர். அகம் இல்லறக் கடமைகளையும், அன்பின் எழுச்சி சார்ந்த நெறியோடு வாழ்வதன் தகைமைகளையும் கூறுகின்றது. புறம் சமுதாயக் கடமைகளையும், புறவாழ்வில் மேற்கொண்டு ஒழுகிவரும் ஒழுகலாறுகளையும் போற்றுகின்றது. பழமைச் சிறப்பு வாய்ந்த மொழியும், மாட்சிமை மிகுந்த பண்பாட்டுச் சிறப்பும், அறநெறி கூறும் நூல்களும், சிந்தனை வளம் நிறைந்த இலக்கண இலக்கியங்களும் தமிழர்தம் வாழ்வியலுக்கு அடித்தளமாக அமைந்துள்ளமை காண்க.

தமிழன் கல்வியைத் தம் உயிரினும் மேலாகப் போற்றி, வணங்கி வருகின்றான். அதனால் அவன் தன் மண்ணில் மிகச் சிறப்புற்று வாழ்ந்து வருகின்றான். எனவேதான் 'அறிவுடையார்



எல்லாம் உடையார்;' என்றும், 'பண்புடையார்ப் பண்டுண்டுலகம்' என்றும் கூறப்பட்டுள்ளது.

### கல்வி


ஆறறிவு மனிதனை ஐயறிவு மிருகங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது கல்வியாகும். இக் கல்விதான் சிந்திக்கும் திறனைக் கொடுக்கிறது. கல்வி வாழ்க்கையோடு தொடர்புடையது. படிப்பு ஒரு வேலையோடு தொடர்புடையது. பொதுவாக இற்றைய கல்வி என்பது பட்டம் வாங்குவதற்கும் வேலை பெறுவதற்கும் என்றாகியுள்ளது. சிந்திக்கும் திறன் இல்லாத இளைஞர்களால் சமுதாயத்தை எதிர்கொள்ள முடியவில்லை; தம் வாழ்க்கையைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை. கல்விக்கும் வாழ்க்கைக்கும் தொடர்பற்ற நிலைமையே தென்படுகின்றது.

கல்வியின் சிறப்புப் பற்றி ஆன்றோர் கூறியுள்ள ஒரு சில கூற்றுக்களையும் காண்போம். 'கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க அதற்குத் தக' என்றும், 'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு' என்றும், 'கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு, புண்ணுடையர் கல்லாதவர்' என்றும், 'கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு, மாடல்ல மற்றை யவை' என்றும் திருவள்ளுவரும், 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' என்றும், 'நாற்பால் குலத்தில் மேற்பால் ஒருவன் கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே' என்றும், 'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்' என்றும், 'கல்விக்கு அழகு கசடு அற மொழிதல்' என்றும் நீதிநெறி நூலாரும் கூறிப் போந்தார்.

கல்வி பற்றிய ஒரு சில மேற்கோள் வாசகங்களையும் இங்கு பார்ப்போம். 'நாளை இறப்பு நிகழுமெனில் நீ உயிருடன் வாழ்ந்திரு. நீ உலகில் என்றும் வாழ்ந்திருக்க விரும்பின் புதிதாகக் கற்றுக்கொள்' என்று மகாத்மா காந்தியும், 'நீ ஒரு மனிதனுக்குக் கல்வி புகட்டினால் அது அவனுடன் நின்று விடும், நீ ஒரு பெண்ணுக்குக் கல்வி புகட்டினால் அது ஒரு தலைமுறைக்குக் கல்வி புகட்டியவாறு அமையும்' என்று பிரைகாம் யங் என்பவரும், 'இவ்வுலகம் ஒரு புத்தகம். இவ்வுலகில் பிரயாணம் செய்யாதவர்கள் அப்புத்தகத்தில் ஒரு பக்கத்தை மட்டும் வாசித்தவர்களாவர்' என்று ஒகஸ்ரின் என்பவரும், 'தன்னைப் பண்படுத்தி வளர்ப்பதற்காக அறிவு பெறுவதுதான் கல்வியின் உண்மையான பயன்' என்று கன்பூசியஸ் என்பவரும், 'எத்தகைய கல்வி ஒழுக்கத்தை உருவாக்குகிறதோ் மனத்தை உறுதிப்படுத்துகிறதோ் அறிவை விரிவாக்குகிறதோ் எதன் மூலம் ஒருவன் தன்னையே சார்ந்திருக்க முடியுமோ அத்தகைய முழுமையான மனிதனை உருவாக்கும் கல்வியே நான் வேண்டுவது' என்று சுவாமி விவேகானந்தரும், 'உயிரினும் மேலாக ஒழுக்கத்தை மதிக்கச் செய்வதுதான் கல்வியாகும். ஆன்மாவின் பார்வையை அறிவொளியின் பக்கமாகத் திருப்புவதே கல்வியாகும். பல்வேறு செய்திகளை மூளையில் திணிப்பது கல்வியன்று. வாழ்க்கை முழுவதையும் கல்வி கவர்ந்து கொள்ள வேண்டும்.' என்று பிளாட்டோ ஆகியோரின் பொன் மொழியாய் அமைந்த நற் செய்திகள் அத்தனையும் நம் கல்வித் திட்ட அதிகாரிகள் அனைவரின் சிந்தையிற் பதிவாகின் சிறந்த திட்டங்கள் உருவாகலாம் என அமைதி கொள்வோம்.

மேற்கூறிய நோக்கங்களை நிறைவு செய்யும் அளவுக்கு நமது தற்பொழுதுள்ள கல்வி முறை அமைந்துள்ளதா என்பது கேள்விக் குறியாகும். நமது கல்வி முறையில் மாற்றம் வேண்டும். நமது சமூகப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றி காணக்கூடிய கல்விமுறைதான் நம் நாட்டிற்குத் தேவையாகும். நமது கல்வி முறையானது பயன்பாடு, பண்பாடு ஆகிய இரண்டையும் தரக்கூடியதாக அமையவேண்டும்.

அறிவியலின் பாரிய வளர்ச்சியால் உலகம் சுருங்கி வருகின்றது. அதேநேரம் சிறப்பு மிக்க மனிதநேயம் மங்கி வருகின்றது. இந்நிலையை மாற்றியமைப்பதற்கு இலக்கியக் கல்வி ஒன்றே மருந்தாகும். தற்பொழுது மாணவர்கள் அறிவியல், தொழில்நுட்பம் ஆகிய புற அறிவுத் துறைகளில் மிகுந்த ஆர்வம் காட்டி நாட்டோடு ஓடிக் கொண்டிருக்கின்றனர். புற அறிவு தேவையற்றது என்று கூறவில்லை. அதுவும் தேவைதான். ஆனால் நேர்மை, நற்குணம், பண்பு, மனிதநேயம் போன்றவற்றைத் தரக்கூடிய அக அறிவும் நம்மவர்க்கு மிக அவசியம் வேண்டற்பாலது.




நாம் அனைவரும் இயந்திரமயமாக்கப்பட்ட வாழ்க்கையில் இறங்கிவிட்டோம். இவ்வாறான மனித மனத்தை ஆற்றுப்படுத்துவதற்குச் சிறந்த இலக்கியங்களே உறுதுணையாய் அமைகின்றன. சமுதாயத்தில் எழும் இலக்கியங்கள் சமுதாய மாற்றத்தை இலக்காகக் கொண்டவைகளே. இவ்விலக்கியங்கள் மக்களை நெறிப்படுத்துகின்றன் திறனை வளர்க்கின்றன் மொழி வளத்தை மேம்படுத்துகின்றன் அறிவை விரிவடையச் செய்கின்றன் கருத்தோட்டங்களைச் சீர்ப்படுத்துகின்றன.

## தாய்மொழி வழிக் கல்வி

சிந்தனைக்கு மொழி மிக முக்கியம். அது மனித இன நாகரிக வளர்ச்சியில் பாரிய பங்காற்றுகின்றது. கருத்துப் பரவல், பரிமாறல் ஆகியவை மூலம் சமுதாய உறவு மேன்மையுற மொழியே முன்னிலையில் உள்ளது. அறிவியல் உட்பட அனைத்து நிகழ்வுகளும் மொழிவழிதான் வெளிப்படுகின்றன.

"அற்புதமான கலை இலக்கியங்கள் மக்களின் மகத்தான படைப்புகளாகும். இந்தப் படைப்புகள் அறிவியல் வல்லுனர்களுக்கு ஊட்டம் தருவனவாக உள்ளன. தமது உணர்வின் மூலம் வெளிஉலகத்தைப் பற்றி ஒரு தகவற் களஞ்சியத்தையே மக்கள் திரட்டியிருக்கிறார்கள். இதிலிருந்துதான் விஞ்ஞானம் வளர்ந்தது." என்கிறது மார்ச்சியத் தத்துவம்.

தாய்மொழி வழிக் கற்பித்தலே சிறந்த கல்வியாகும். தாய்மொழியே சிந்திக்கும் ஆற்றலை வளர்க்க உதவுகின்றது. சிந்தனைச் சக்தி குன்றிய மாணவர்களை உருவாக்கும் கல்வி முறையை 'பேடிக் கல்வி' என்று காந்தியடிகளும், பாரதியாரும் சாடுகின்றனர். கல்வி நிறுவனங்களான பாடசாலை வகுப்பறைகளில் மாணவ மாணவிகளுக்குக் கருத்துச் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. பாடங்களை மனப்பாடம் செய்வதையே ஊக்குவிக்கப்படுகின்றது. மனப்பாடமும், ஒப்புவித்தலும் மாணவ மாணவிகளின் சிறந்த திறமைகளெனக் கருதப்படுகின்றது. இவர்களுக்குத்தான் கூடிய மதிப்பெண்கள் கொடுக்கப்பட்டு, முதல் நிலை மாணவ மாணவிகள் என்று அறிவிக்கப்படுகின்றனர். உண்.மையில் இவைகள் யாவும் மாணவ மாணவிகளை மந்த நிலைக்குள் ஆழ்த்தி விடுகின்றது. கல்வியானது மக்களின்

சிந்தனை ஆக்கத்திற்கு உறுதுணையாய் அமையவேண்டும்.

## கலையும் அறிவியலும்

கலையும், அறிவியலும் ஒன்றுடன் ஒன்றிணைந்து வாழ்பவை. கலையை ஒரு வித்து என்று கூறினால், அறிவியலை அந்த வித்தின் மரம் என்று கூசாமல் கூறலாம். 'கலையும் விஞ்ஞானமும் கணவனும், மனைவியும் போல இவர்தம் வாழ்க்கைச் சிறப்பு, பிரிவிலும், இணைப்பிலும் தங்கியுள்ளது' என்று மிக அழகாகக் கூறியுள்ளார் ஜான்பால் என்பவர். 'யுசவள யனெ ளுஉநைநஉந: ர்ரளடியனெ யனெ றுகைநஇ வாந டகைந ஙநிநனௌ ரிழஸீ வாநசை ளநியசயவஙைஸீ யனெ உழதெரஸீஉவஙைஸீ.' வாழ்க்கையின் சிறப்பு இணைந்திருப்பதிலேயே தங்கியுள்ளதைப் போன்று கலையும், அறிவியலும் இணைந்தே இருத்தல் வேண்டும். மேலை நாடுகளில் அறிவியல் வளர்ந்ததுபோல் வாழ்வியல் வளரவில்லை. இலங்கையில் வாழ்வியல் வளர்ந்ததுபோல் அறிவியல் வளரவில்லை. அறிவியல் அற்ற கலைகளும் பயனற்றவை. கலையற்ற அறிவியலும் ஆபத்தானது.

அரிஸ்டாட்டில் (கி.மு.384322) என்பவர் 'அறிவாளிகளின் தந்தை' என்று பெயர் சூட்டப்பட்டவர். அவர் ஓர் அறிவியல் மேதையும், மிகச் சிறந்த கலை ஞானியுமாவார். அரிஸ்டாட்டில் முதல் அப்துல் கலாம் வரை அறிவியலாளர்களிற் பெரும்பாலோர் கலை ஆர்வலர்களாகவே காணப்படுகின்றனர். அக நோக்கு, புற நோக்கு, தத்துவம், முன்னேற்றச் சிந்தனை ஆகியவை இலக்கியவாதிகளுக்கும் அறிவியலார்க்கும் பொதுவானவைகளாகும். கலைஞர்கள் வெறும் படைப்பாளிகள் என்று புறம் தள்ளிவிடக் கூடாது. அவர்கள் படைப்புகளில் நிறைந்த அறிவியற் சிந்தனைகளைக் காணலாம். இவை பல கண்டுபிடிப்புகளுக்கு உந்துதலாய் அமைந்துள்ளதையும் காண்கின்றோம். தொல்காப்பியர் (கி.மு.711) இயற்றிய தொல்காப்பியம் தமிழின் முதல் இலக்கியமும், இலக்கணமுமாகும். தொல்காப்பியர் எழுத்திலும், சொல்லிலும் ஒரு மொழியியல் அறிவியலாளராகவும், பொருளியலில் ஒரு சமுகவியல் அறிவியலாளராகவும், மரபியலில் ஓர் உயிரியல் அறிவியலாளராகவும் விளங்குகிறார். உயிர்களின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையை உலகுக்கு அளித்த சி.ஆர். டார்வினுக்கு ஆற்றுப்படுத்தியது தொல்காப்பியரின் ஆறறிவுயிர்களின் பகுப்பும், சிறப்பும், மரபும் ஆகும் எனலாம்.

## கல்வி அன்றும் இன்றும்

*1.* குருகுல வாசம்: அன்று மாணவர்கள் குரு வீட்டில் பல ஆண்டுகள் தங்கியிருந்து அவருக்குத் தொண்டு செய்து கல்வி கற்று வந்தனர். அது ஒரு குரு பக்திக் காலமாகும்.

*2.* திண்ணைப் பள்ளிக் கூடம்: ஆசிரியர் தனது வீட்டிலுள்ள திண்ணையில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த காலம் அது. அன்று மாணவர்கள் காத தூரம் நடந்து சென்றுதான் ஒரு சில திண்ணைப் பள்ளிகளில் கல்வி கற்றனர்.

*3.* பாடசாலை: இன்று பாடசாலையில் வகுப்பறைகள் அமைத்துப் பாடம் சொல்லிக் கொடுக்கும் முறை உள்ளது. பாடசாலைகளும் தெருவுக்குத் தெரு வந்துவிட்டன. அறிவியல் முன்னேற்றத்தால் தொலைக்காட்சி, கணினி, மின்னஞ்சல், இணையம், மடிக் கணினி, தொலைபேசி, இணையத் தளம் ஆகியவை மக்கள் மத்தியில் உலாவத் தொடங்கியதும், உலகம் சுருங்கத் தொடங்கி விட்டது. வருங்காலக் கல்வி வகுப்பறை முறைகளை இல்லாதொழித்து விடும். ஏனெனில் உலகமே மாணவர்களின் வகுப்பறையாகி விடும். இவ்வாறே காலத்துக்குக் காலம் கல்வி முறைகள் மாறுபடும்.

வாழ்வியற் சிறப்பிற்கு அறிவியற் பாடங்கள் மட்டும் போதாது. அதனுடன் கூடவே கலை ஞானமும், மொழி அறிவும் தேவையாகும். அறிவியற் பாடங்களின்றிக் கல்வி முழுமை பெறாது. அஃதேபோல் கலை இலக்கியங்களின்றி வாழ்வியல் முழுமை அடையாது. வாழ்வியல் மேம்பாட்டிற்கு அறிவும் பண்பும் தேவை. கல்வியாற் பெற்ற அறிவும், பண்பும் வாழ்வியலுக்கு உறுதுணையாய் அமையவேண்டும். புதியதோர் உலகம் காண இலக்கிய நயமும், அறிவியற் பயனும் மிக வேண்டற்பாலதாகும்.




தமிழின் அருமை தெரியாமல் ஒரு தலைமுறை வளர்ந்து வருகிறதே நம் தமிழ்ச் சமுதாயத்தில் என, தமிழ் ஆர்வலர்கள் பலர் கலங்கிப் போயிருக்கும் காலம் இது. ஆனால், உரிய நேரத்தில் உரிய முறையில் எடுத்துச் சொன்னால் இளைய தலைமுறை நிச்சயம் ஏற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையோடு அவர்களிடம் பேச வேண்டியது பெரியவர்களின் கடமை. தமிழ் என்பது தமிழர்களுக்கு வெறும் மொழி அன்று. அது தமிழரின் வாழ்வியல்.தமிழ்மக்களின் சமத்துவ அடையாளமாகவும் அவர்களை ஒருங்கிணைக்கும் பாலமாகவும் இருப்பது தமிழ் மொழி. எனவேதான் மொழி காக்கும் பணியைபலதலைவர்களும் அறிஞர்களும் முன்னெடுத்தார்கள்; முன்னெடுத்து வருகிறார்கள். அவர்களில் முக்கியமானவர்கள் பலருண்டு. அந்தவரிசையில் நம் போற்றுதலுக்கு உரிய பெருமக்கள் காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களுக்கும் பாவலேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கும் மிகவும் குறிப்பிடத்தக்க இடம் உண்டு.

## காயிதேமில்லத்

நேர்மையானவர்; கண்ணியமானவர்; எளிமையானவர்; மொழிப்பற்றும் நாட்டுப் பற்றும் நிரம்பியவர் –இப்படி பலஅடையாளங்களுக்குச் சொந்தக்காரர் காயிதேமில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்கள்.

தேசிய அளவில் புகழ் பெற்ற தமிழர்கள் என்ற பட்டியலில் பலதலைவர்களின் பெயர்களைச் சேர்ப்பவர்கள், தெரிந்தோ தெரியாமலோ காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் என்னும் பெயரைச் சேர்க்கத் தவறிவிடுகிறார்கள். ஆனால் அந்தப் பட்டியலில் இடம் பெறுவதற்கான அத்தனைத் தகுதிகளும் கொண்டவர் காயிதே மில்லத் அவர்கள். இந்தியாவின் அதி முக்கியஅவைகள் அனைத்திலும் இடம்பெற்ற தமிழர். சென்னை மாகாணசட்டமன்றம், இந்தியநாடாளுமன்றத்தின் மாநிலங்களவை, மக்களவை, இந்தியஅரசியல் நிர்ணயசபைஆகிய நான்கிலும் இடம்பெற்றவர்.


முகமது அலி ஜின்னாவின் தலைமையில்

முஸ்லிம் லீக் இயங்கியபோது அதன் முக்கியத்தலைவராக இருந்தவர் காயிதேமில்லத். இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு இந்தியயூனியன் முஸ்லிம் லீக்கின் தலைவராக காயிதேமில்லத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

விடுதலைக்குப் பிறகான முதல் பொதுத்தேர்தலின் போது காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து போட்டியிடுமாறு காயிதே மில்லத்துக்கு அழைப்பு விடுத்தார் பிரதமர் நேரு. காங்கிரஸ் கட்சியின் சின்னத்திலேயேநின்றால் வெற்றிநிச்சயம் என்றநிலை. ஆனால், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தன்மானத்துடன் தனது தனித்தன்மையைக் காக்கும் என்று சொல்லிவிட்டார் காயிதே மில்லத்.

முஸ்லிம் லீக்கின் அகில இந்தியத் தலைவர் பொறுப்பில் இருந்தாலும் தேர்தல் அரசியல் நோக்கங்களைப் புறக்கணித்து, தமிழ் மொழி, தமிழ் மக்களின் உரிமைகளுக்காக நேர்மையுடனும் துணிவுடனும் தெளிவான பாதையில் இயங்கியவர் காயிதேமில்லத்.

இந்திய அரசியல் நிர்ணயசபையின் உறுப்பினராக இருந்தபோது இந்திக்கு எதிராகவும் தமிழுக்கு ஆதரவாகவும் குரல் கொடுத்தவர் காயிதேமில்லத். "ஒரு உண்மையை இச்சபை முன்பு துணிவோடு கூற விரும்புகிறேன். இந்த நாட்டு மண்ணில் பேசப்பட்ட மொழிகளில் மிகவும் பழமையானதும், ஆரம்பகாலத்தில் இருந்து பேசப்பட்டு வரும் மொழியாக இருப்பதும் தமிழ்தான். எனது கூற்றை எந்த வரலாற்று ஆசிரியராலும் மறுக்க முடியாது. எந்தப் புதை பொருள் ஆராய்ச்சியாளராலும் எதிர்க்க முடியாது. உயர்தரமான இலக்கிய வளங்களும், நயங்களும் நிறைந்த மொழிதமிழ். இது எனது தாய் மொழிஎன்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அம்மொழியை நான் நேசிக்கிறேன். அம்மொழியைப்பற்றி நான் பெருமைப்படுகிறேன். பழமையான மொழியைத்தான் இந்நாட்டின் தேசிய மொழியாக்க வேண்டுமென்றால் இந்தியாவின் தேசிய மொழியாகத் தமிழைத்தான் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று பேசினார் காயிதேமில்லத். அதேபோல தேவிகுளம் பீர்மேடு விவகாரத்திலும் தமிழகத்துக்கு ஆதரவான நிலைப்பாட்டையே எடுத்தார் காயிதேமில்லத்.



காங்கிரஸ் கட்சியின் தீவிர எதிர்ப்பாளராகவே காயிதேமில்லத் விளங்கினார். அதன் பொருளாதாரக் கொள்கைகளை, செயல் திட்டங்களில் இருக்கும் குளறுபடிகளைக் கடுமையாக விமர்சித்தார். குறிப்பாக, தமிழ்நாட்டில் ஆட்சியில் இருந்த காங்கிரஸ் கட்சிக்கு எதிராக மிகப்பெரிய அரசியல் கூட்டணியை உருவாக்க முனைந்தார். சுதந்தரா கட்சி, மார்க்சிஸ்டு கம்யூனிஸ்ட் போன்ற எதிரெதிர் துருவங்களில் செயல்படும் கட்சி களை ஓரணியில் கொண்டுவர வேண்டும் என்ற அண்ணாவின் முயற்சிக்குப் பக்கபலமாக இருந்தார் காயிதேமில்லத். அவருடைய முயற்சியால் ஏழுகட்சிக் கூட்டணி உருவானது. அந்தத் தேர்தலில் வீழ்ந்த காங்கிரஸ் இன்றுவரை தமிழ்நாட்டில் எழுந்திருக்கவே இல்லை.

காயிதேமில்லத் எப்படித் தமிழராகவும் தமிழ்ப்பற்றாளராகவும் விளங்கினாரோ அதைப்போலவே முழுமையான இந்தியராகவும் விளங்கினார்.

1971 ஆம் ஆண்டு பாகிஸ்தான் ராணுவம் இந்திய எல்லையில் ஆக்கிரமிப்புச்



செய்தபோது அதைஎதிர்த்த அரசியல் தலைவர்களுள் காயிதேமில்லத் முக்கியமானவர். நமது "அருமைவாய்ந்த தாயகத்தின் மீது பாகிஸ்தானியர் நடத்தும் ஆக்கிரமிப்புக்கு நான் பலத்த கண்டனம் தெரிவிக்கின்றேன். ஐயந்திரிபற்ற எனது கண்டனத்தைத் தெரிவிக்கின்றேன். இந்தியா எங்கனும் உள்ள முஸ்லிம் மக்களும் மற்றுமுள்ள அனைத்து மக்களும் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பை எதிர்த்து இந்திய அரசாங்கத்தின் பின்னாலும் பிரதமரின் பின்னாலும் ஒருமுகமாகவும் உறுதியாகவும் நிற்கிறார்கள்" என்றார் காயிதேமில்லத்.

சிறுபான்மை மக்களின் நலன் காக்கும் ஓர் இயக்கத்தின் தலைவராகவேகாயிதேமில்லத் பொறுப்பேற்றிருந்தாலும் ஒரு தமிழராகதமிழ் மொழிக்கும், இந்தியராக தம் நாட்டுக்கும் ஆற்ற வேண்டிய கடமைகளை மிகநிறைவாகவே ஆற்றினார். அதனால்தான் இன்றும் அனைத்து மக்களாலும் அவர் போற்றப்படுகிறார்.

## பாவலரேறு

தமிழகமும் தமிழீழமும் முழுமையான விடுதலை அடைய வேண்டுமெனில் நாம் இனியும் உணர்வற்ற மக்களாய் வெறும் சோற்றுப் பிண்டங்களாய் வாழக்கூடாது. "உரிமையைமீறிய ஒரு வளம் இல்லை" எனும் அறைகூவலை தமிழ் மக்களின் கொள்கை முழக்கம் ஆக்கியவர் பாவலரேறு பெருஞ் சித்திரனார் அவர்கள்.

திராவிட இயக்கவரலாற்றில் அஞ்சா நெஞ்சன் என்ற பெருமைக்குச் சொந்தக்காரர் பட்டுக்கோட்டை அழகிரி என்றால், தமிழியக்க வரலாற்றில் பாவலரேறு அவர்கள்தான் அஞ்சா நெஞ்சன். பொய்யான அரசியல் பேசிவயிறு வளர்க்காமல், வறுமையே வாட்டினாலும் உண்மையை உரக்கச் சொல்லி இன உணர்வை வளர்த்த தமிழ்த் தேசிய புரட்சிப் பாவலர் பாவலரேறு. படிப்போரின் நரம்புகளைப் புடைத்தெழ வைக்கும் தமிழின மீட்சிவரிகளை எழுதி வைத்தவர்.

**"என் இனம் என் நாடு நலிகையில்**
**எதனையும் பெரிதெனஎண்ணமாட்டேன்**
**வேறுஎவரையும் புகழ்ந்துரை சொல்லமாட்டேன்"**

எனப் பாடிய பெருஞ்சித்திரனார், தமிழினத்தை ஒன்றுபடுமாறு ஒவ்வொரு நாளும் அறைகூவல் விடுத்தார்.

எந்தக் கட்சியில் நீ இருந்தாலும்
இனத்தை மறந்திடாதே -தமிழா
இனத்தை மறந்திடாதே - உன்
சொந்தக் குடும்பம் தனைப்பல கருத்தால்
சுட்டுப் பொசுக்கி டாதே-தமிழா
சுட்டுப் பொசுக்கிடாதே.

எந்தத் திசையில் நீ இருந்தாலும்
ஏற்றந் துறந்திடாதே -தமிழின்
எழிலைத் துறந்திடாதே -பழங்
கந்தலை யுடுத்துக் கஞ்சியை யருந்தினும்
கனிவையிழந்திடாதே-இனக்
கருத்தை யழித்திடாதே.

எந்தநிலத்தினில் நீ இருந்தாலும்




லண்டன் தமிழர் தகவல் இதழிலும் தமிழகத்து இலக்கிய இதழ்களிலும் கவிஞர் இசாக் எழுதி வெளியான குழந்தைகளை கொண்டாடும் கவிதைகளின் தொகுப்பு வண்ணப்படங்களுடன் வெளிவர உள்ளது.

தேவைக்கு **தமிழர் தகவல்** இதழைத் தொடர்புக் கொள்ளுங்கள்

இயல்பை மாற்றிடாதே -இனத்தின்
இணைப்பையறுத்திடாதே- உன்
முந்தையர் வாழ்ந்த முதுதமிழ் நாட்டின்
மொழியைமறந்திடாதே -உணர்வை
மூளி யாக்கிடாதே.

எந்தப்படையினில் நீ இருந்தாலும்
இனத்தை எதிர்த்திடாதே -தமிழா
எதிரிக் குழைத்திடாதே - உன்
சொந்தத் தமையனைத் தம்பியைக் கொல்லவே
சூழ்ச்சி நினைத்திடாதே -பகைவன்
சோற்றில் நனைந்திடாதே."



தமிழகத்தில் பாவலரேறு அவர்களின் எழுத்துக்களை திரும்பத் திரும்பச் சொன்னாலே தமிழகம் எழுச்சி பெற்றிருக்கும்.ஏனோ அவரைமறந்து வருகின்றனர் தமிழ்த்தேசம் பேசும் தமிழகத் தலைவர்கள் பலர்!

"வாழ்ந்தாலும் தமிழுக்கும் தமிழர்க்கும் வாழ்வேன்!
வளைந்தாலும் நெளிந்தாலும் தமிழ்பொருட்டே ஆவேன்!
தாழ்ந்தாலும் வீழ்ந்தாலும் தமிழ்மேல்தான் வீழ்வேன்!
தனியேனாய் நின்றாலும் என் கொள்கைமாறேன்!
சூழ்ந்தாலும் தமிழ்ச்சுற்றம் சூழ்ந்துரிமை கேட்பேன்!
சூழ்ச்சியினால் பிரித்தென்றன் உடலை யிரு கூறாய்ப்
போழ்ந்தாலும் சிதைத்தாலும் முடிவந்த முடிவே!
எரித்தாலும் புதைத்தாலும் என்
அணுக்களெல்லாம் அதுவே!"

தமிழன் எந்நிலையிலும் எழுச்சி குன்றாத் தமிழனாகஒன்றுபட்டஇனத்தின் மீட்சிக்காய்உழைக்கும் உண்மைத் தமிழனாகவாழவேண்டும் என்றஆதங்கம் அவருடைய பாடல்களில் எப்போதும் வெளிப்படும்.

பாவலரேறுஅவர்களின் கவிதைகளைப் படிக்கபடிக்க நம் உணர்வுகள் விழிப்படையும். அவரின் தமிழ் ஆய்வைஅறியஅறிய நம் தமிழறிவு பெருகும்! அவரின் நேர்த் தமிழைச் சுவைக்கச் சுவைக்கத்தமிழின் பெருமையை அறிவோம்; தமிழால் பெருமை அடைவோம்!

தமிழ்த் தேசிய பேராசான் பாவலரேறு அவர்களை வாழ்த்தி அவர் போற்றியதமிழ் உணர்வை, இனஉணர்வை முன்னெடுத்து வென்றிடுவோம்!

# ஆதிக் கலைஞன்

மனிதனின்
வயிறு பசித்தது
தொழில்கள் பிறந்தன
இதயம் பசித்தது
கலைகள் பிறந்தன

ஆண்டவன்தான்
ஆதிக் கலைஞன்
அவன்
பிரபஞ்சத்தைக்
கற்பனை செய்தான்
கவிதைக் கலையங்கு
கண்விழித்தது

மலைகள் கடல்கள்
மரங்கள் மலர்களென
வகை வகையான
வடிவங்கள் படைத்தான்
சிற்பக் கலையெனும்
அற்புதம் பிறந்தது

சுடரும் சூரியத்
தூரிகை கொண்டு
வனப்பில் மிளிரும்
வண்ணங்கள் தீட்டினான்
ஓவியக் கலையங்கு
உதயமானது

நம்மை உலகில்
நடமாட விட்டான்
நாடகக் கலையின்
நயம் தொடங்கியது

கலைகள்
தன்னைத் தானே
பிரசவம் செய்ய
மனிதன் செய்யும்
மகோன்னத முயற்சி

பிறந்தான் இறந்தான்
என்பது
மனிதனின் சரித்திரம்
ஆனால்
பிறந்தது இறக்கவில்லை
என்பது
கலையின் அற்புதம்

அழியும் மனிதனிடமிருந்து
பிறந்தன
அழியாத கலைகள்
ஆண்டவன் படைப்பெலாம்
அழியும் ஒழியும்
மனிதனின் படைப்புக்கோ
மரணமே இல்லை

இயற்கையைப் பிரதி
எடுப்பதே கலையெனச்



சொன்னவன் மூடன்

அள்ளித் தெளித்த
அவசரக் கோலமாய்
இருக்கும் இயற்கையின்
எழில்களில் எல்லாம்
தெரியும் குறைகளைத்
திருத்தும் முயற்சியே
கலையின் பிறப்புக்குக்
காரணம்

ஆம், கலை
தெய்வத்தின் படைப்பையே
திருத்தும் வேலை
அழகில் முழுமையை
அடையும் முயற்சி

நீல முற்றத்தில்
புள்ளி வைத்த
இரவுப் பெண்ணுக்குக்
கோடி முத்துக்
கோலம் முடிக்கத்
தெரிய வில்லையே!

அழகிய வசந்தத்தின்
அரசவைப் பாடகி
தேன் குரல் குயிலுக்குத்
தெரிந்த தெல்லாம்
ஒரு சுரம்தானே!

நட்டு வாங்கம்
நடத்தும் மேகக்
குரலுக்கு ஆடும்
கோலமயில் நர்த்தகி
அறிந்த தெலாம் ஒரே
அபிநயம் தானே!

தோன்றிய நாள்முதல்
சூரிய ஓவியன்
வானத் திரையில்
வரைந்து வரைந்து
கிழித்த தென்ன?
முழுசாய்
ஒருபட மாவது
உருவாக்க முடிந்ததா?

பூக்கள் என்ற
பெயரில் தாவரம்
வாசனை இதழ்களின்
வாய் பெற் றிருந்தும்
கவியொன்று பாடக்
கற்ற தில்லையே!

இயற்கையின் நிலையே
இப்படி அரைகுறை
செயல் கை மனிதனின்
செயற்கைக் கலைகளோ
பரிபூ ரணத்தைப்
படைக்கும் முயற்சி

இயற்கை என்பதே
இறைவனின் செயற்கை
செயற்கை என்பதோ
மனிதனின் இயற்கை

இறைவனின் படைப்புக்கு
உயிர்உண்டே என்பார்
உண்மைதான்
உயிருண்டு ஆதலால்
அற்ப ஆயுளும்
அதற்குண்டு

அவதார இராமனே
இறந்து போனான்
கம்பனின் இராமன்
சாவ துண்டோ?






# கவிக்கோ அப்துல் ரகுமான்

கரவை மு. தயாளன்

# சில மனிதர்களும் சில நியாயங்களும்



தகப்பனின் திடீர் நுழைவால் திடுக்கிட்டுப்போன ஆரண்யாவுக்கு என்ன கதைப்பதென்றே புரியவில்லை. சிறிது நேரம் இருவரும் எதுவுமே கதைக்கவில்லை. மௌனத்தைக் கலைத்தவர் மகேந்திரமே.

"என்ன ஆரண்யா எப்படி இருக்கிறாய்"

என்று சர்வ சாதாரணமாக அவர் கேட்டவுடன் குழப்பத்துடன் "ஏதோ இருக்கிறன்." என்று இழுத்தாள்.

அவளுடைய பதிலால் கொஞ்சம் உற்சாகமடைந்த மகேந்திரத்தார் மேலும் கதைப்பதற்குத் தயாரானார்.

"உனக்கு என்னைப் பிடிக்காதென்ற விடயம் நல்லாய்த் தெரியும். ஆனாலும் நான்தான் உன்ரை அப்பா எண்டதை எப்பிடி மாற்ற முடியும். உனக்குள்ள பிரச்சினைகள் எனக்குத் தெரியும். அவற்றை ஏன் மனம்விட்டு நீ என்னொடை கதைக்கக் கூடாது. அப்பாவுக்கு அந்தளவுக்குத் தகுதியில்லை எண்டு நினைக்கிறாயா?" மகேந்திரத்தார் கதைத்தவிதம் அவளுடைய மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கவேண்டும்

அவளின் கண்களிலிருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்திருந்தது.

இந்த சூழ்நிலையை தனக்கு சாதகமாகத் திருப்பிக்கொண்ட மகேந்திரத்தார் மேலும் தொடர்ந்தார்.

"நீ நல்லாகப் படிச்சிருக்கிறாய். உன்னைப் படிப்பிச்சதிலை உன்ரை அம்மாவுக்குத்தான் நான் நன்றி சொல்ல வேணும். தனி ஒரு மனிசியாய் நின்று எல்லாத்தையும் சாதிச்சிருக்கிறா. என்னை நீ சுயநலம் பிடிச்சவனென்று திட்டியிருக்கிறாய். என்னுடைய நிலையை நீ புரிஞ்சு கொள்ளாததுதான் உண்மை. என்னதான் நீங்கள் சொன்னாலும் என்னாலை இந்த அகதி வாழ்க்கையை ஏற்றுக் கொள்ள



முடியேல்லை." என்று கூறிவிட்டு மௌனம் சாதித்தார்.

"சரி பழைய கதையை விடுவம். உனக்கு என்னிலை நம்பிக்கை இருந்தால் உன்ரை பிரச்சினையை தெளிவாய்ச் சொல்லு."

சிறிது நேரம் இருவரும் எதுவும் கதைக்கவில்லை.

மௌனத்தின் ஆட்சி மிகப்பலமாக இருந்தது.

ஆரண்யா மனதுக்குள் போராடிக் கொண்டிருந்தாள். அப்பாவிடம் தன் பிரச்சினைகளைச் சொல்வதா இல்லையா என்பதே அவளின் மனப் போராட்டமாக இருந்தது.

நிரம்பக் குழம்பிப்போயிருந்தாள். அப்பாவிடம் சொல்வதால் பிரச்சினை தீரலாம் என்ற ஆதங்கமும் அவளுக்கிருந்தது. எப்படிச் சொல்வதென்பதுதான் அவளுக்குப் பிரச்சினையாக இருந்தது.

வெளியில் காத்துக் கொண்டிருந்த ஆதிக்கும் மற்றவர்களுக்கும் ஒரே கலக்கமாக இருந்தது. எங்கே ஆரண்யா தகப்பனை எடுத்தெறிந்து பேசிவிடுவாளோ என்ற பயம் இருந்தது.

ஆனால் இதுவரை எந்த தாக்கமும் இல்லாதிருப்பதைப் பார்த்து மனதுள் ஆறுதல் அடைந்திருந்தாலும் அடுத்த கட்டத்தை நோக்கி ஆவலாகவே இருந்தனர்.

அறையினுள் இருந்த ஆரணி தகப்பனுக்கு அருகில் மெதுவாக வந்தமர்ந்தாள்.

மகேந்திரத்தாரும் நீண்டகாலத்துக்குப்பின் அவளின் அண்மையால் உணர்ச்சி வசப்பட்டு கண்கலங்கியபடி அவளின் தலையைத்தடவியபோது ஆரண்யா அழுதேவிட்டாள்.

எவ்வளவு காலம் இந்த அப்பா மகள் உறவு தள்ளி இருந்தது.

"நீ ஒண்டுக்கும் யோசியாதை அம்மா நான் உன்ரை பிரச்சினையைத் தீர்த்து வைப்பன். எல்லாம் சுமுகமாக நடக்கும் அதுக்குத்தானே அப்பா வந்திருக்கிறன்" என்று அவர் கூறக்கூற ஆரண்யாவின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து

கொண்டிருந்தது. உணர்ச்சி எல்லை கடந்து வாய்விட்டு அழவே தொடங்கிவிட்டாள்.

இந்தச் சத்தம் கேட்டு வெளியிலிருந்தவர்கள் உள்ளே வந்துவிட்டார்கள்.

உள்ளே வந்தவர்கள் தகப்பனும் மகளும் இருந்த கோலத்தைப் பார்த்து அவர்களும் அழத் தொடங்கிவிட்டார்கள்.

உணர்ச்சிகளை வெளித் தள்ளக்கூடிய விதத்தில் அழுகை என்ற ஒன்றை இறைவன் மனிதனுக்குக் கொடுத்திருக்காவிட்டால் அவன் என்றைக்கோ உணர்ச்சிகளால் வெந்து செத்திருப்பான்.

மகேந்திரத்தாரும் ஆரண்யாவும் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கி இருந்தமையைப் பார்த்து மனங்கலங்கி நின்ற மதிவதனி தன்னுடைய வாழ்க்கையில் மீண்டும் வசந்தம் வீசுமோ என ஐயப்படலானாள்.

எல்லோரும் வெளியெ வந்தார்கள். இன்னும் தகப்பனும் மகளும் அறைக்குள்ளெயே இருந்தனர்.

"என்னம்மா நீ அந்தப் பையனை விரும்பிறியாம்மா?"

"அதுதான் எனக்கும் தெரியேல்லை அப்பா. ஆனால் எல்லாரும் நான் அவனைக் காதலிக்கிறதாகவே முடிவு கட்டியிட்டாங்கள்."

"அந்தப் பையன் என்ன நினைக்கிறான்?"

"அவனும் என்ரை நிலை தான். ஆனால் அவன் நல்லவனப்பா. அப்பாவி. கூடாத கூட்டத்தோட

சேர்ந்ததாலை பிரச்சினையளுக்கை மாட்டுப் பட்டிட்டான். எனக்குச் சில பிரச்சினையள் வரேக்கை என்னை ஆரெண்டு தெரியாமலே உதவி செய்தவர். அதிலைதான் எனக்குப் பழக்கம். பிறகுதான் அத்தானுக்குச் சொந்தமென்டு தெரிஞ்சுது."

"சரி பிரச்சினையை என்னட்டைச் சொல்லியிட்டாய். இனி அமைதியாய இரு எல்லாத்தையும் நான் பார்க்கிறன்."



ஆரண்யாவுக்கு இப்போதான் நிம்மதியாக இருந்தது. தன் பாரமெல்லாவற்றையும் இறக்கிவிட்ட தைரியத்தில் அவளின் உதடுகளில் சிறு புன்னகை ஒன்று விரிந்தது. இருவரும் வெளியெ வந்தனர். அவர்களின் முகத்தில் மனங்களின் நிறைவு தெரிந்தது.

அவர்கள் வெளியே வந்ததும் மதிவதனி தேநீர் தயாரிக்கச் சென்றாள்.

"என்ன ஆரணி இனி எங்களை நீ கவனிக்க மாட்டாய் போல. இனி அவளுக்கு அப்பாதான் உலகமாக்கும்." என்றாள் ஆதித்யா

ஆரணி ஒரு புன்னகையை மட்டும் பதிலாகக் கொடுத்தாள்.

அப்போ ஒரு தொலைபேசி வந்தது.

ஆதித்யாதான் எடுத்தாள்.

மறுகரையில் அழுகைச் சத்தம் கேட்டது.

எல்லோரும் இருக்கையை விட்டு எழுந்துவிட்டனர்.

ஆதித்யா பதட்டத்துடன் " எப்ப நடந்தது?" என்று கேட்டாள்.

"சரி சரி அழாதையுங்கோ நான் அப்பாவுக்குச் சொல்லிறன்" என்று கூறிவிட்டுத் தொலைபேசியை வைத்துவிட்டாள்.

எல்லோரும் அவள் என்ன சொல்லப்போகிறாள் என்பதையே பார்த்துக் கொண்டிருந்தனர்.

(இன்னும் வரும்...)

# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்

தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு
உலகத்தாருக்கும்
இன்பம் தருவதைக் கண்டு,
அறிஞர்கள் மேலும் மேலும் பலவற்றைக்
கற்றிட விரும்புவார்கள்.

செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

நட்புக் கொள்வது போன்ற
அரிய செயல் இல்லை.
அதுபோல் பாதுகாப்புக்கு ஏற்ற செயலும்
வேறொன்றில்லை.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

**விலை. 2 பவுண்ட் மட்டும்**



# தங்கத் தமிழ்

தமிழுரை # **அறிவுமதி**
எழிலுரை # டிராட்ஸ்கிமருது

**திண்கால் உறியன், பானையன், அதளன்**
**நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்பத்**
**தண்டுகால் ஊன்றிய தனிநிலை இடையன்,**
**மடிவிடு வீளை கடிதுசென்று இசைப்பத்**
**தெறிமறி பார்க்கும் குறுநரி வெரீஇ**
**முள்ளுடைக் குறுந்தூறு இரியப் போகும்**

*இடைக்காடனார், அகநானூறு 274,*
*திணை முல்லை.*

நாகரிகத்தைக்
கண்டெடுத்துக் கொடுத்த நாமே
கண்டபடி பேசலாமா?

என்ன பேசினாங்க?

என்ன பேசினாங்களா..?
என்னென்னவோ பேசுறாங்க.

போடா...
கூழ குடிச்ச பயலே!

போடா...
குந்தக் குடிசையில்லாத பயலே!

போடா...
பொறம்போக்கு!

நீயெல்லாம்
ஆடு மேய்க்கத்தா லாயக்கு;
மாடு மேய்க்கத்தா லாயக்கு.

யார, யார் பேசுறது?
தன்னோடு பிறந்த தன் இனத்தை
தன் இனமே பேசுறது!

கூழ்... மட்டமான உணவா?
'ஆறாம்திணை'யை
ஆறு முறை படிச்சிட்டு
அப்புறமா சொல்லுங்க.

குந்தக்கூடக் குடிசையில்லாம
நம்ம இனம் நம்ம மண்ணுல
இலவச மனைப் பட்டா கேட்டு
இன்னும் அலையுதேங்கிற
தவிப்பு நெருப்ப
இன்னும்... இங்க பத்தவைக்க முடியலன்னா
அப்புறம் எதுக்குங்க இந்த அரசியல்?

ஆடு, மாடு மேய்ச்சவங்களோட அந்த
அனுபவங்கள்லதாங்க
பண்பாடு பதப்பட்டது;
வாழ்க்கை அழகானது.

அவங்க
அதிகமாப் பயன்படுத்தின
அழகான
ஒரு தூய மொழியை
நாம எவ்வளவு எளிமையா
கொச்சை செய்துட்டோம்.

எப்படி?

எப்படியா..?
'விசிலடிச்சான் குஞ்சுகள்'னு.
அந்த ஒலி ஒண்ணும்
அர்த்தமற்ற இரைச்சலுக்கானது இல்லைங்க.

அது...
குறிஞ்சியிலும் முல்லையிலும்
தாங்கள் எங்கெங்கே இருக்கிறோம்
எங்கே வந்துகொண்டிருக்கிறோம் என்பதை,
தூரங்களை மீறி
காட்டு அடம்புகளை மீறி
தெரிவித்துக்கொள்கிற
குறியீட்டு மொழி.

அடையப்போட்ட ஆடுகளில்
ஒன்று எழுந்து
ஒழுங்கீனம் செய்ய முற்பட்டால்
இந்த மொழிதான் போய்,
மொத்த ஆட்டுக் கூட்டத்தையும்
முறை செய்யும்.

நள்ளிரவு, இடி மின்னலுடன் மழைத்தூறல்.
உறி, பானை, தோற்படுக்கை இவற்றோடு
ஒற்றைக்காலில் ஒரு காலை தண்டில் ஊன்றி
நனைந்தபடி நிற்கும் அந்த இடையர்,
ஒலிக்குறிப்புகளாலேயே
தம் பட்டி ஆடுகளுக்கு வர இருக்கிற
ஆபத்தினை அறிந்து
சீழ்க்கையொலி இசைக்கிறார்.

அந்த ஒலி விரைவாகப் போய்
குட்டி ஆடுகளைத் தூக்கிப்போக வந்திருக்கும்
குறு நரியைத் திடுக்கிடவைத்து
முள் நிறைந்த புதருக்குள்
விரட்டிவிட்டுத் திரும்புகிறது.

உயிர் காத்த அந்தச் சீழ்க்கை,
வீளை என்ற மொழியை
இனி... தவறான பொதுக் கருத்தில்
கொச்சை செய்துவிடாதீர்கள்.

அது, அந்த மொழியைக் கண்டெடுத்து
நமக்குத் தந்த குறிஞ்சி, முல்லை மூத்தோரை
அவமதிப்பதாக ஆகிவிடும்!

நன்றி #விகடன்.
#தங்கத்தமிழ்



கார்காலக் கவிதைகளை எழுதிக் கொண்டிருந்த இலக்கிய இளைஞர் நா. முத்துக்குமார், திரைப்பாடல்களை எழுதத் தொடங்கியது எதிர்பாரா ஒரு இனிப்பு விபத்து. பலருக்கும் கலங்கரை விளக்கமாகத் திகழும் கவிஞர் அறிவுமதியின் பரந்த தோளில் இவருக்கு இடம் கிடைத்தது. செந்தமிழன் சீமானால், திரைப்படப் பாடலாசிரியர் என்ற மகுடமும் இவருக்கு சூட்டப்பட்டது. பச்சையப்பன் கல்லூரித் தமிழ்க்காற்றும் செழித்த தமிழ்ப்படைப்புகளும் இவரது விலாப்புறங்களில் வண்ணச்சிறகுகளை வளர்த்தன. திரைவானை ஆனந்தமாய் அளக்கத் தொடங்கிய முத்துக்குமார், இதயம்தொடும் இலக்கியப் பாடல்களால் தனக் கொரு சிம்மாசனத்தை கண்ணதாசன், வாலி, வைரமுத்து வரிசையில் சிருஷ்டித்துக்கொண்டார். இவரது உயிரோட்டமான திரைப்பாடல்கள், இன்று இவரது மார்பில் தேசிய விருதை கம்பீரமாகக் குத்தியிருக்கிறது.

முத்துக்குமார் எழுதிய *16* நூல்களில் *8* கவிதை நூல்கள், பிற கட்டுரை, கதை, மொழிபெயர்ப்பு வகையைச் சேர்ந்தவை. பல்வேறு பல்கலைக்கழகங்களிலும் சிங்கப்பூரிலும் முத்துக்குமாரின் நூல்கள்

# நான் பூத்துக்குலுங்க காரணமானவர்கள்...!

நா. முத்துக்குமார்

பாடமாக வைக்கப்பட்டிருப்பது உபரி சிறப்பாகும். ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன், இந்தி, தெலுங்கு, மலையாளம் என இவரது கவிதைகள் பிறமொழிகளிலும் பெயர்க்கப் பட்டு, நாடு, இனம் போன்ற எல்லைகளைத் தாண்டி வலம் வருகின்றன. புகழின் சிகரங்களிலும் தன்னடக்கம் காத்துவரும் நா. முத்துக்குமாரை சந்தித்தபோது...

**உங்கள் இளமைக்காலம் பற்றி?**

என் நான்கு வயதிலேயே என் அம்மா இறந்து விட்டார். அதனால் என்னைத் தனிமை தத்தெடுத்துக் கொண்டது. அப்பா வாங்கிக்குவித்திருக்கும் நூல்கள், என் தனிமைக்குத் தோழமையாக இருந்தது.

**பாடலாசிரியராய் ஆவீர்கள் என்றோ, தேசிய விருதெல்லாம் வாங்குவீர்கள் என்றோ மாணவப் பருவத்தில் நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?**

இல்லை.

**உங்கள் விருப்பப்படி உங்களை செதுக்கியவர் உங்கள் அப்பா. நீங்கள் தேசியவிருது பெறும் இந்த நேரத்தில் அவர் இல்லாததை எப்படி உணர்கிறீர்கள்?**

தேசியவிருது அறிவிப்பு வந்தபோது, என் மனக்கண்ணில் இரண்டுபேர் வந்தார்கள். ஒருவர் என் தந்தை நாகராஜன். இன்னொருவர் என் ஞானத்தந்தை பாலுமகேந்திரா. என்னை உச்சிமுகர்ந்து வாழ்த்த அவர்கள் இல்லையே என்று பரிதவித்தேன்.

**உங்களின் இன்றைய வளர்ச்சிக்கு உரமிட்டவர்கள் யார் யார்?**

நான் சுயம்பு இல்லை. என்னை வளர்த்தவர்கள் நிறைய பேர். குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் காஞ்சி இலக்கிய வட்ட நாராயணன், கவிஞர் அறிவுமதி அண்ணன், "வீரநடை' படத்தின் மூலம் என்னைப் பாடலாசிரியராய் ஆக்கிய இயக்குநர் சீமான் அண்ணன், இயக்குநர் அருண்மொழி, பாலுமகேந்திரா, பட்டுக்கோட்டை பிரபாகர், பத்திரிகைத் துறையில் நக்கீரன் கோபாலண்ணன், பெ. கருணாகரன், என் முதல் பாட்டுக்கு இசையமைத்த தேனிசைத் தென்றல் தேவா, இன்றுவரை என்னைத் தொடர்ந்து பாடல் எழுதவைத்துக்கொண்டிருக்கும் இசைஞானி இளையராஜா மற்றும் அனைத்து இயக்குநர்கள், இசையமைப் பாளர்கள், ரசிகர்கள் என்று இத்தனை பேரும் சேர்ந்துதான் என்னைப் பூத்துக் குலுங்க வைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

**அதிக சந்தோஷம் என்றாலோ அதிக துக்கம் என்றாலோ அதை எப்படி எதிர்கொள்வீர்கள்?**

இரண்டிலுமே நான் அழுதுவிடுவேன். அடுத்த ஒரு மணி நேரத்தில் என்னை சராசரியாய்த் தயாரித்துக்கொண்டு அடுத்த வேலையைப் பார்க்க ஆரம்பித்து விடுவேன்.

**உங்களால் மறக்கமுடியாத ரசிகர் ரசிகை பற்றி?**

உலகெங்கும் நிறைய ரசிகர்களைத் தேடிக் கொடுத்திருக்கிறது என் தமிழ். சென்னை பாண்டிபஜாரில் இருக்கும் ஒரு அசைவ உணவகம். சாப்பிட்டுவிட்டு நான் வெளியே வந்தபோது ஒருவர் ஓடிவந்து கைகுலுக் கினார்.


பின் சற்றும் எதிர் பாராதபடி என் கன்னத்தில் முத்தமிட்டு "இது ஆனந்த யாழுக்காக' என்று சொல்லிவிட்டு தன் பெயரைக்கூட சொல்லாமல் போய்விட்டார். இது தேசிய விருதுக்கு முன்பாக எனக்குக் கிடைத்த அன்பு விருது. இதேபோல் ஆப்பிரிக்க நாட்டின் பின்சீனியா நகரிலிருந்து நள்ளிரவில் வந்தது அந்தப் பெண் குரல். "நான் தற்கொலை செய்துகொள்ளும் முடிவில் இருந்தேன். அப்போது "பேசுகிறேன். பேசுகிறேன். உன் இதயம் பேசுகிறேன்' என்ற உங்கள் பாடலைக் கேட்டேன். எனக்கு வாழும் ஆசை வந்துவிட்டது. நன்றி' என்றார். அவரும் தன் பெயரைச் சொல்லாமலே போனை வைத்து விட்டார்.

**உங்கள் கிராமத்துக் கேரக்டர்களில் உங்கள் நினைவில் அடிக்கடி வந்து போகும் கேரக்டர் எது?**

பச்சையப்பன் என்கிற கேரக்டரை என்னால் மறக்கமுடியாது. தேநீர்க்கடை வைத்திருந்தார். கோடை என்றால் பனை ஏறி நுங்குக் கடையும் போடுவார். பார்வைக்கு நடிகர் செந்திலைப் போலவே தோற்றமளிப்பார். சுற்றுப்பட்டு கிராமத் தெருக்கூத்துகளில் அவர்தான் கட்டியக்காரர். எனக்கு சினிமா ஆசை வந்ததற்கு இவரும் ஒரு காரணமாக இருக்கலாம்.

**உங்கள் பாடல்களில் உங்களுக்கு அதிகம் பிடித்த பாடல்கள் என்றால் எதையெதைச் சொல்வீர்கள்?**

எல்லாப் பாடல்களும் என் மனக்கிளையில் மலர்ந்த பூக்கள்தான். எனினும் "7ஜி ரயில்வே காலனி'யின் "கண் பேசும் வார்த்தைகள் புரியவில்லை', "டும்டும்டும்' படத்தின் "ரகசியமாய்... ரகசியமாய்', "நந்தா' படத்தின் "ஓராயிரம் யானை கொன்றால் பரணி', "காதல்' பட "உனக் கென இருப்பேன்', "வெயில்' பட "வெயிலோடு விளையாடி', கஜினியில் "சுட்டும் விழிச் சுடரே... சுட்டும் விழிச்சுடரே', "மதராசப் பட்டணம்' படத்தில் "பூக்கள் பூக்கும் தருணம்', "பையா' படத்தின் "என் காதல் சொல்ல நேரமில்லை', "சத்தம் போடாதே' பட "பேசுகிறேன் பேசுகிறேன்', தங்கமீன்கள் பட "ஆனந்த யாழை மீட்டுகிறாய்' தற்போது



"சைவம்' படத்தின் உன்னிகிருஷ் ணன் மகள் பாடிய "அழகே அழகே' என ஒரு பட்டி யலே போடலாம்.

**உங்கள் திரைப்பாடல்களுக்கு பலம் சேர்ப்பது மரபுப் பயிற்சியா? இல்லை புதுக்கவிதை முயற்சியா?**

வார்த்தைகளுக்கு மரபுப்பயிற்சியும் வாழ்க்கை அனுபவத்திற்கு புதுக்கவிதை முயற்சியும் பலம் சேர்ப்பதாகக் கருதுகிறேன்.

**விடலைப்பருவத்தில் உங்கள் மனதில் கல்லெறிந்த தேவதை பற்றி சொல்ல முடியுமா?**

முதல் காதல் என்பது புத்தகத்திற்குள் ஒளித்து வைக்கும் மயிலிறகு மாதிரி. எந்தக்

காலத்திலும் அது குட்டிபோடாது என்று தெரிந்தும், ஞாபக உணவை அதற்கு ஊட்டிக்கொண்டுதான் இருக் கிறார்கள். என் பால்யகால சகியை நினைக்கும் போதெல்லாம், தெருவடைத்த மார்கழி வாசல் கோலங்களும், மஞ்சள் நிறத்துப் பூசணிப்பூக்களும்தான் மனதில் வந்துவிட்டுப் போகின்றன.

**நல்ல வரிகளை எழுதி, அதை இயக்குநரோ, இசையமைப்பாளரோ மாற்றச் சொன்ன சங்கட விபத்துக்களை நீங்கள் சந்தித்தது உண்டா?**

பாடலாசிரியன் என்பவன் இசையமைப்பாளரின் இசைக்குறிப்பை சிதைக்காமல், வார்த்தைகளைத் தைக்கிறவன் இதை நான் சொல்லவில்லை. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் இளங்கோவடிகள் சொல்கிறார். எந்த நல்லவரியும் மெட்டுக்குள் அடங்கியிருந்தால் மாற்றச் சொல்ல மாட்டார்கள். எனவே இப்படிப்பட்ட சங்கட விபத்துக்கள் எனக்கு நேர்ந்ததில்லை.

**நீங்கள் வெகுநாட்க ளாக எழுத நினைக்கிற படைப்பு எது?**

காஞ்சிபுரத்தைக் களமாகக்கொண்டு ஒரு நாவலை 15 வருடங்களாக எழுதிக்கொண்டிருக்கிறேன். கதையோட்டம் என்னை இழுத்துச் சென்றபடியே இருக்கிறது. நல்ல காற்று வீசுகிறபோது அது மழையாகப் பெய்யும்.

**உங்கள் மனதில் இடம்பிடித்த இலக்கியப் படைப்புகள் எவை?**

புதுமைப்பித்தனில் தொடங்கி, ஜி. நாகராஜன், சுந்தரராமசாமி, லா.ச.ரா, அசோகமித்திரன், தி. ஜானகிராமன், எம்.வி. வெங்கட்ராம், கரிச்சான்குஞ்சு, வண்ணநிலவன், கண்ணதாசன் என்று நகர்ந்து இப்போது எழுதும் லட்சுமி சரவணகுமார் என சொல்லிக்கொண்டே போகலாம். தமிழுக்கு நிகராக ஆங்கிலத்திலும் வாசிப்பவன் நான். எதைச் சொல்வது? எதை விடுவது?

**தமிழ்த் திரையுலகில் பாடலாசிரியர்களுக்கு சரியான அங்கீகாரம் கிடைத்திருப்பதாக நம்புகிறீர்களா?**

கண்டிப்பாக. தமிழ்த் திரையுலகில் மட்டுமல்ல; தமிழ்ச் சமூகமும் கவிஞர் களை நன்றாகவே கௌரவப்படுத்துகிறது. அதனால்தான் சென்னை மெரினாவில் கவிஞர்களின் சிலைகள் அதிகமாக இருக்கின்றன.

**இலக்கிய ஆளுமைகளான வைரமுத்து, மேத்தா, ரகுமான், தமிழன்பன் போன்றோர் பற்றி உங்கள் எண்ணம் என்ன?**

வைரமுத்து புதுக்கவிதையின் கம்பீரம்! மேத்தா, வானம்பாடிகளின் வானம்! அப்துல்ரகுமான், கஜல் கவிதைகளின் கனிமரம். ஈரோடு தமிழன்பன் படிமங்களின் பாசறை இப்படி ஒவ்வொருவரைப் பற்றியும் நிறைய சொல்லலாம்.

**உலகின் உச்சபோதை எது?**

நம் முப்பாட்டன் வள்ளுவனே இந்தக் கேள்விக்குத் தெள்ளத்தெளிவாய் பதில் சொல்கிறான். உலகின் உச்ச போதை காதலா? காமமா? பணமா? புகழா, மதுவா? இவை எதுவுமே இல்லை.

“தம் மக்கள் மொழி கேட்டல்...'

**“ஆனந்த யாழை மீட்டுகிறாய் “பாடலுக்கு தேசிய விருதை எதிர்பார்த்தீர்களா?**

எல்லாப் பாடல்களுமே மக்களிடம் அங்கீகாரம் பெறவே எழுதப்படுகின்றன. அந்தவகையில் இந்தப் பாடல், மக்களின் ஏகோபித்த அங்கீகாரத்தைப் பெற்றிருக்கிறது. அதேசமயம் நான் எதிர்பார்க்காத நிலையிலும், தந்தை மகள் உறவு பற்றி இந்த உயிரோட்டமான பாடலுக்கு தேசிய விருது கிடைத்திருப்பது மகிழ்வை ஏற்படுத்துகிறது. இந்த விருதை என் தமிழ்ச்சமூகத்திற்கு நெகிழ்ச்சியோடு சமர்ப்பிக்கிறேன்.

# மூதுரை



## நிதியும் கணவனும்

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடனீர்
நாழி முகவாது நானாழி - தோழீ
நிதியும் கணவனும் நேர்படினும் தந்தம்
விதியின் பயனே பயன்.

**தோ**ழியே, ஆமாகிய கடலிலேயுள்ள நீரை அழுத்தி மொண்டாலும் நான்குபடி நீரை ஒருபடி மொள்ளாது. (அதுபோல) செல்வமும், ஆளத்தக்க தலைவனும் அமைந்திருந்தாலும் அவரவருடைய முற்பிறவியில் செய்த வினையின் பயனுக்கு ஏற்ற அளவே பலன் பெற முடியும்.

(கருத்து - செல்வம் அடைந்து, அச்செல்வத்திற்குத் தக்க தலைவனும் அமைந்தாலும் நினைத்தபடியே அனுபவித்து விடமுடியாது. விதிக்கீடாகவே அனுபவிக்க முடியும் என்பதாம்)

தமிழர் தகவல் இதழின் சிறப்பான பணியைப் பாராட்டி பல கடிதங்கள் வந்துள்ளன... அவற்றில் ஒன்று இந்த இதழில் பதிவு செய்துள்ளோம். கையால் எழுதும் பழக்கம் குறைந்துவரும் சூழலில் வாசகரால் கையால் எழுதப்பட்ட கடிதம் அப்படியே வாசகர்களின் பார்வைக்கு.

தமிழர் தகவல்
அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

உமா மகாலிங்கம்.
119, Elion Bank
London SE23 3XD.
01-06-2014.

வைகாசி மாத இதழ், பதினேழு ஆண்டுகால பயணத்தை நிறைவு செய்ததை மிக மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். தமிழ் நாட்டிலிருந்து புகழ்பெற்ற பேச்சாளர்களான, சுகி சிவம், சாம. வீரபாண்டியன் ஆகியவர்களுடைய ஆசியுரைகள், தமிழர் தகவலுக்கு கிடைத்த பொன்மொழிகளாகும். இலண்டன் இதழ்களுடைய சிறப்புக் கட்டுரை ஆக்கங்களுடைய பின்னல் [illegible].


பதிப்பாசிரியரின் மனம் திறந்த மடலை, மனம் வருந்தும் மடலாகவே காணமுடிகிறது. [illegible] இல்லை என்பது [illegible] இருக்கும் ஒரு மொழி. பதிப்பாசிரியர் கூறியதும், பல தவறுகள் கூட பிரசுரத்திலும், நிர்வாகத்திலும், விளம்பர வருமானத்திலும் வெளிப்படையாகக் காணப்பட்டாலும், [illegible] கூறுவதாக, உள்ளேயிருந்து [illegible] செய்வதுதான் அமைந்திருந்தது.

இவையெல்லாம் இதழையும் [illegible] வெளியிட்டு ஒரு [illegible] அறியவில்லை. பதினேழு ஆண்டுகள், பல இடர்களின் மத்தியிலும், மனம் தளராது தனது பணியினை, தான் சார்ந்த சமூகத்துக்கும், இனத்துக்கும், மொழிக்கும், பிறந்த மண்ணுக்கும் அயராது உழைத்து வரும் ஒரு [illegible] ~~[illegible]~~ [illegible] உதவி செய்ய முன்வராவிட்டாலும், மனத்தால் நாலு வார்த்தைகளில் நன்றி கூறுவதற்கு கூட உள்ளவர்கள் இல்லையே என்பதுதான் ஆசிரியருடைய மனம் திறந்த மடலின் ஆதங்கமாகும்.

கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதுதான் சைவ சித்தாந்தத்தின் கூற்று. அதற்கமைய பட்டறிவில் வளர்ந்த பதிப்பாசிரியர் அவர்கள் தொடர்ந்தும் தமது பணியை செவ்வனே செய்ய எம்மை வாழ்த்தி இறைவன், நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் நிறைவே அருள வேண்டுகிறோம்.

நன்றி, வணக்கம்
இங்ஙனம்
[illegible]
உமா மகாலிங்கம்.

# திருமுறைக்கு ஒரு விழா



தேனாக இனிக்கும் செய்தியொன்று அண்மையில் என் காதுகளில் விழுந்தது. திருமுறை விழா ஒன்று இலண்டனிலே நடக்கப்போகிறது என்பதுதான் அந்தச் செய்தி. இதை ஒரு சைவனாக மிகுந்த ஆவலுடன் நான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறேன். ஏனெனில், திருமுறைகளிலே ஆர்வம் உண்டு; அநுபவிக்க விருப்பம் உண்டு; கேட்க ஓதுவதையும் அவைபற்றிப் பேசுவதையுங் கேட்க அவாவுண்டு. ஆனால், திருமுறைகளை, அவற்றின் அருமை பெருமைகளை மேற்கு நாடுகளில் வாழும் தமிழர் பலருமே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது என் கருத்து. அதனால், இந்தத் திருமுறை விழா அந்தக் குறையை நிவர்த்திசெய்யும் என்றொரு நம்பிக்கை மனத்திலே எழுகிறது. அதேவேளை ஒரு கவலையும் தோன்றுகிறது. ஈழத் தமிழர்கள் செறிந்து வாழும் மேற்கு நாடுகளிலும், கிழக்கு நாடுகளிலும் பல விழாக்கள் நடக்கின்றன. பல பெயர்களில் நடக்கின்றன. பல நோக்கங்களோடு நடக்கின்றன. ஆனால் இவையெல்லாம் தத்தம் நோக்கங்களை நிறைவேற்றினவா? என்று சிந்திக்கும்பொழுது சிறிது ஏமாற்றம் ஏற்படுகிறது. அதுதான் கவலைக்குக் காரணம். அப்படி என்னை ஏமாற்றியவை எந்நெந்த விழாக்கள் என்று குறிப்பிட்டு விழா அமைப்பவர்களின் கோபத்தையும் அநுதாபிகளின் ஆதங்கத்தையும் நான் தேட விரும்பவில்லை. வாசகர்களின் கற்பனைக்கு அதை விட்டுவிடுகிறேன்.

திருமுறைகள் பற்றியும் அவற்றின் பெருமை பற்றியும் இதற்கு முன் பல இடங்களிற் குறிப்பிட்டுள்ளேன். ஆனால், மீண்டும் அவைபற்றி எழுதுவதிலே தவறில்லை என்று தெரிகிறது. ஒரே விடயத்தைப் பலமுறை சொல்வதால் அது அடையவேண்டிய இடத்தை அடைய ஒரு வாய்ப்புண்டு அல்லவா?

வேதங்களை அருளியவர் சிவன் என்பது சைவசமய நம்பிக்கை. அந்த இறைவனே

அருளாளர்களைப் படைத்து அவர்களின் வாயிலாகத் தமிழ்வேதம் என்று சொல்லக்கூடிய அருட்பாடல்கள் பலவற்றை ஓதுவித்தார் என்பதும் நம்முடைய நம்பிக்கை. சைவத்திலே பன்னிரண்டு திருமுறைகள் உள்ளன. திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் ஈறாக அருளாளர்கள் அருளியவை அவை. அவை தவிர, வேறுபல அருட்பாடல்களும் உள. அபிராமி அந்தாதி, திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தர் அநுபூதி போன்றவற்றைச் சொல்லலாம். இவைகளைப் 'பாடுவது' என்று சொல்வதே தவறு. ஓதுவது என்றுதான் சொல்வது மரபு. யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலர் அவர்கள் தேவாரம் ஓதுபவர்கள் ஆசாரசீலர்களாய் இருக்கவேண்டும் என்று எழுதியுள்ளார். முப்பொழுதும் திருமேனி தீண்டும் சிவாசாரியர்கள்போலவே இவர்களும் ஆசாரமாக இருக்கவேண்டும் என்பது நடைமுறை விதி. இவர்களை ஓதுவார் மூர்த்தி என்றே அழைப்பர். தமிழ்நாட்டிலே சில கோயில்களிலே மட்டும் ஓதுவார்கள் இப்போதும் இருக்கிறார்கள். குடும்பம் நடத்தப் போதிய வருமானமும் தொழிலிலே இருந்த மரியாதையும் குறையத் தொடங்கியதும் ஓதுவார் வழிவந்தவர்கள் அத்தொழிலை விட்டு வேறு வேலைகளுக்குப் போக ஆரம்பித்தார்கள். அது அவர்களின் குற்றமல்ல. மிகக் குறைந்த வருவாய் வந்தபோதும் இந்தத் தொழிலை ஒரு புனித சேவையாகக் கருதி இன்னும் சில ஓதுவார்கள் பண்;ணிசை பாடிக்கொண்டு இருப்பதை இன்றும் நாம் காணலாம்.

முன்னரே சொன்னதுபோல ஆலயங்களிலே பண் ஓதுபவர்கள் சிவாசாரியர்களைப்போல ஆசாரத்தைக் கடைப்பிடிப்பவர்களாக இருக்கவேண்டும். பண்ணிசை படித்தவர்களாக இருக்கவேண்டும். பிழையற ஓதத் தெரியவேண்டும். அப்படி இல்லையென்றால் திருமுறை பலனற்றதாகிவிடும். அடுத்து வரும் சந்ததி பிழையாகவே கற்று பிழையாகவே ஓதிவர ஆரம்பித்து, திருமுறைகள் மறைய ஆரம்பிக்கும். இப்போதும் பல கோயில்களிலே இது தொடங்கிவிட்டது. தேவாரம் தெரியாத பலரே தேவாரம் ஓத முன்னுக்கு நிற்கிறார்கள். அண்மையில் ஒரு கோயிலிலே சிறுவன் ஒருவனைத் தேவாரம் ஓதவிட்டார்கள். மழலையாக அவன் பல பிழைகளுடன் ஓதியதைப் பலரும் கேட்டுப் பராட்டினர், இன்புற்றனர். இதையே பிழை பிழையாக ஓர் அந்தணச் சிறுவன் வந்து சுலோகம் சொல்லியிருந்தால் அதை இவர்கள் பாராட்டியிருப்பார்களா?

திருமறைகளும் திருமுறைகளும் உச்சரிப்புச் சுத்தமாக ஓதவேண்டியவை. இல்லையேல் அவற்றால் எவ்வித பலனும் இல்லை. அப்போ சிறுவர்கள் எப்படிக் கற்றுக்கொள்வது? சந்தர்ப்பம் கொடுக்கவேண்டாமா? என்று கேட்பது தெரிகிறது. அவர்களை முறையாகப் பயிற்றுவித்து அவர்கள் சரியாகப் பாடும்வரை மேடைகளை அமைத்துப் பாடவையுங்கள். பின்னர் கோயிலிலே கொண்டுவந்து ஓதவையுங்கள் என்பதுதான் இதற்கான பதில். சிவாசாரியர்களும் ஓதுவார்களும் தத்தம் பயிற்சிப் பட்டடையில் பலவருடங்கள் பயின்ற பின்னரே வந்து முறையாக திருமறையையும் திருமுறையையும் ஓதுகிறார்கள். அவர்களின் தந்தையோ, பாட்டனோ இதே தொழில் செய்தார், அதனால் அவரும் செய்யலாம் என்பது தவறு.

பல தமிழ்க் குடும்பங்களிலே திரையிசைத் தாக்கம் மிகவும் ஏற்பட்டிருக்கிறது. திரையிசை கேட்பது தவறு என்று சொல்லவில்லை. திரையிசையை மட்டும் கேட்பதுதான் தவறு. முன்பு திரையிசைப் பாடல்களிலே சொற்சுவை, பொருட்சுவை இருக்கும். இசையும் இரசிக்கும்படியாக இருக்கும். இப்போ அது மாறிவிட்டது. தற்காலத் திரைப்பாடல்களிலே மிக விரசமான, சிறுவர் கேட்கக்கூடாத சொற்கள்பல விரவிவருவதைக் கேட்கமுடிகிறது. அப்படிக் கவிதை எழுதுபவர்களைப் பாராட்டி இங்கிருந்து போகும் அறிஞர்கள் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பது மிகவும் வேதனை தருவதொன்று.

இப்படியான நிலையில், நடக்கவிருக்கும் திருமுறை விழா இந்த மாயையிலிருந்து நம்முடைய இளந்தமிழ்ச்சமூகம் விடுபட ஏதாவது செய்யுமானால் அது மிகவும் வரவேற்கத்தக்க ஒரு செயலாக இருக்கும். நம் இளைய சந்ததி நம்மை வாழ்த்தும். நம் பாரம்பரிய திருமுறைகளை அடுத்த சந்ததி எடுத்துச் செல்ல உதவும். காத்திருப்போம்!



பரபரப்பான
விற்பனையில்...
நீண்ட இடைவெளிக்குப்பிறகு
தமிழர் தகவல்
பொங்கல் சிறப்பிதழ்
வெளிவந்துவிட்டது.
குறைவான
பிரதிகளே
உள்ளன
பல சுவையான
36 சிறுகதைகள்
கட்டுரைகளுடன்
5 பவுண்ட் மட்டுமே!




# TT and Friends

இசைக்குழுவின் 25.05.2014 நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இந்த இசைச் சகோதரிகளின் இசைத்திறனைப் பாராட்டி 2004 ஆண்டு சனவரி தமிழர் தகவல் இதழ் அட்டையில் இவர்களின் படங்களை வெளியிட்டு உற்சாகப்படுத்தினோம் என்பது குறிப்பிடத்தக்கது.





Aarti tv
உலகின் மிகப் பிரமாண்டமான தமிழ் தொலைக்காட்சி நிலையம்!
OVER
500 Tamil Movies
Available Instanly
30ற்கும் அதிகமான தமிழ் தொலைக்காட்சி சேவைகள் ஒரேதளத்தில்
Local Time Broadcast: Indian Time / UK Time / European Time
பதிவில் இருக்கும் 7 நாட்களுக்குரிய நிகழ்ச்சிகளை எவ்வேளையிலும பார்வையிட வசதியானது.
சற்றலைற்றுகளை பொருத்த தேவை இல்லை.
FREE CRICKET CHANNELS
FREE CHANNELS
MultiRoom Viewing
எமது வாடிக்கையாளர்கள் தங்களது வீடுகளில் இருக்கும் அறைகளில் ஒரே நேரத்தில் பல அலைவரிசைகளை பார்வையிடுவதற்கான வசதியை அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன்மூலம் ஒரே வீட்டில் பல தொலைக்காட்சிகளை வைத்திருக்கின்றவர்கள் தாங்கள் விரும்பிய தொலைக்காட்சி நிகழ்ச்சியை ஒரே நேரத்தில் பார்க்கமுடியும்.
SPECIAL OFFER
12 Months Subscription
+
Set Top Box
£ 99
24 மணிநேர வாடிக்கையாளர் சேவை இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்
100% LEGAL
United Kingdom
0203 318 2004 / 0783 276 9522
Web
WWW.AARTITV.TV
15 Days Money Back GUARANTEE


இலண்டனில் தரமான தங்கத்திற்கு
PATHMINI
JEWELLERS
22ct GOLD
892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999


லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை
கற்பகம்
தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்
KATPAGAM
36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 694 88 10
உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்


எவரஸ்ட்
24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233
அசத்தலான
அசைவ சுவைக்கு
Breakfast Lunch Dinner


Anthoorium
World of Designs
Jewellery & Textiles
102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk

# Hotel Westeern

**Hotel Westeern (Pvt) Ltd**
35, Frankfurt Place
Bambalapitiya
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board

# EELAM SHOP

399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545

# Chennai Spice

Restaurant and Banqueting

Restaurant and Banqueting is open
7 days a week
Chennai Spice offers
authentic Srilankan &
South Indian cuisine

London's premier
Outdoor Caterers for
Srilankan & South Indian food.
We cater for a variety of events
such as Weddings, Engagements,
Arangetrams, Birthday parties,
conference to name a few.

Free
Home Delivery
(order over £15)

*Chennai Spice Restaurant and Banqueting*
213-217 Hertford Road, London, N9 7ER
Tel : 020 8805 9944, 020 8805 8215, Mob : 07932 059 553
*email : info@chennaispice.com*

ஆடை ஆபரணம் வாங்க ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும் நாடவேண்டிய ஒரே இடம்

# Jk Gold House & Fashion House

314 - 316 London Road
Croydon, Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677

புதன் கிழமை
விடுமுறை

# செல்வராஜா

கோல்டு ஹவுஸ் & டெக்ஸ்டைல்ஸ்

எங்களிடம் தாலிக்கொடி
வாங்குவோருக்கு
பட்டுப்புடவை விலையில்
50% விலை கழிவு

நகைகள் அனைத்திற்கும்
செய்கூலி 50% விலைக்கழிவில்

Exclusive Designer Jewellery
Sarees & all other Dresses
Selvaraja Gold House & Textile

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள சீட்டுத் திட்டத்தில்
இணைந்து நீங்களும் ஒரு அதிஸ்டசாலி ஆகுங்கள்.

தாலிகள் அனைத்தும் தங்கத்தின்
விலைக்கே செய்துதரப்படும்

அனைத்துவிதமான புடைவைகளும்
45% விலைக்கழிவில்

162, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269

# Thinesh

**Jewellers & Textiles**

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com



லூசியத்தில் தரமான
நகைக்கடை

Book typing and layout
*(English and Tamil)*
Book & Wrapper Design
Brochure Design
and Printing
Contact
ambika.siva5@gmail.com

அழைப்பிதழ்கள், நூல்கள், இதழ்கள்
வடிவமைக்க...
சிறந்த முறையில்
அச்சிட....
தொடர்பு கொள்ளுங்கள்
ambika.siva5@gmail.com


# ஆன்மீக யாத்திரை

ஆன்மீக சுற்றுலா
ஆறு பகல், ஐந்து இரவு
காசி, திரிவேணி சங்கமம், அயோத்யா, கயா
கட்டணம் ஒரு நபர்க்கு £ 950
தங்கும் இடம், உணவு,
Airport pickup and drop, Local transport உட்பட

## பாரத்வாஜ் டூர்ஸ் & டிராவல்ஸ்

B 5/270 ஹனுமான் காட்
வாரனாசி - 221 001
Tel : (0542) 227 6932
Mob : 095546 66612 / 094530 02020
Email : kasimani24@gmail.com

லண்டன் தொடர்புகளுக்கு தமிழர் தகவல்




AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
FOR FURTHER DETAILS
AYNGARAN VIDEO : 020 8543 7159
020 8903 3300, 020 8543 4342, 020 8543 4477
ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு
இம்சை அரசன் 23ஆம் புலிகேசியின்
வெற்றியைத் தொடர்ந்து
வடிவேலுவின் அடுத்த
நகைச்சுவை விருந்து
AGS எண்டர்டெய்ன்மெண்ட்
கல்பாத்தி S.அகோரம்
TENALIRAMAN
DIRECTION : YUVARAJ DHAYALAN MUSIC : D.IMMAN
STARRING: VADIVELU, MEENAKSHI DIXIT, RADHARAVI, SANTHANA BHARATHI, DEVADHARSHINI
FROM FRI 18TH APRIL - CINEWORLD CINEMAS
FELTHAM, ILFORD, WANDSWORTH, WEMBLEY, LIVERPOOL, STOCKPORT
BIRMINGHAM, CRAWLEY, GLASGOW, CARDIFF, STAPLESCORNER
ADVANCE BOOKING : http://www.cineworld.co.uk OR CALL - 0871 220 1000
AT HARROW SAFARI - DAILY SHOWS FROM FRI 18TH APRIL
1.30PM - 5.00PM - 8.00PM - (11.00PM FRI / SAT /SUN)
ADVANCE BOOKING: http://www.safaricinema.com OR CALL - 020 8426 0303 / 0606
CHILDREN WILL BE ALLOWED
FOR FURTHER DETAILS : 020 8540 1500, 020 8903 3300. Subjected to changes in show times within advertise period.
JOIN US ON
YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran
visit us: www.ayngaran.com

BEST FOODS PARATA

BUY 1 GET 1 FREE




£ 1.19

On Your Way
Best Foods
Est. 1989
SUPERMARKET


88 years of silk heritage
RmKV
Wedding Silks
Bridal Seven
panagal park chennai
brooke bond rd coimbatore
vannarpettai tirunelveli
toll free no 1800 425 3105
(applicable within India only from 10am to 9pm)
sms Bridal7 to 53636
email silks@rmkv.com
www.facebook.com/RmkvSilks
purchase online at www.rmkv.com
Now in
Bangaluru
Orion Mall
brigade gateway campus
Dr. Rajkumar rd
malleswaran-rajaji nagar
bengaluru

# திருவருள்மிகு
# வடஇலண்டன் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

## நூதன ஆலய சங்குஸ்தாபன விழா







## 22.06.2014 - ஞாயிற்றுக்கிழமை

அம்பிகை அடியார்களே

நிகழும் மங்களகரமான ஜய வருடம் ஆனித்திங்கள் 8ம் நாள் (22.06.2014) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் 11.15 மணி வரையுள்ள சிம்ம இலக்கின சுபவேளையில் என்பீல்ட் நாகபூசணி அம்பாளுக்கு புதிய ஆலயம் அமைப்பதற்காக பாத சிலா ஸ்தாபனம் எனும் அத்திவாரம் அமைப்பதற்காக பூமி பூஜை செய்து சங்குஸ்தாபனம் நிகழ்வதற்கு அம்பாள் திருவருள் பாலித்துள்ளார். இந்த சங்குஸ்தாபன நிகழ்வில் கலந்து கொண்டு உங்கள் கைகளினால் சங்குஸ்தாபனம் செய்து கொள்ளலாம்.

## நிகழ்ச்சி நிரல்

வைகாசி 19 (02.06.2014 திங்கள்)

காலை 9.55 - 11.55 வரை விநாயகர் வழிபாடு, கணபதி ஹோமம், பூமி பூஜை, நிலம் உழுதல் அங்குரார்ப்பணம்.

வைகாசி 21 (04.06.2014 புதன்)

காலை 9.14 முதல் 9.47 வரையுள்ள வாஸ்து நேரத்தில் வாஸ்து பூசை, (நாள் வேளை ஆரம்பம்).

வைகாசி 29 (12.06.2014 வெள்ளி)

காலை 8.00 மணி ஆதார சிலா ஸ்தாபனம்.

ஆனி 4 (18.06.2014 புதன்)

காலை 9.30 மணிக்கு கணபதி ஹோமம், இலட்சநாம அர்ச்சனை ஆரம்பம்

ஆனி 5 (19.06.2014 வியாழன்)

காலை 9.30 மணிக்கு நவக்கிரக ஹோமம், இலட்சநாம அர்ச்சனை

ஆனி 6 (20.06.2014 வெள்ளி)

காலை 9.00 மணிக்கு இலட்சுமி ஹோமம், இலட்சநாம அர்ச்சனை மாலை - 1009 சங்கு பூஜை.

ஆனி 7 (21.06.2014 சனி)

காலை 9.30 மணிக்கு 1009 சங்கு பூஜை, ஆதாரசிலா பூஜை, சகஸ்ரநாம பாராயணம்
மாலை 1009 சங்கு பூஜை, ஆதாரசிலா பூஜை, சகஸ்ரநாம பாராயணம்

### ஆனி 8 (22.06.2014 ஞாயிறு)

அம்பாள் பிரார்த்தனை, பூர்ணாகுதி, அபிசேகம் காலை 9.30 மணியளவில் விநாயகர் அம்பாள் எழுந்தருளல் 10.00 மணி தொடக்கம் 11.00 மணி வரையுள்ள சிம்ம லக்கின சுபவேளையில் பிரதான சங்குஸ்தாபனம் தொடர்ந்து அடியவர்கள் சங்குஸ்தாபனம், பிரசாதம் வழங்கல்.

இவ்வரிய வரலாற்று நிகழ்வாகிய சங்குஸ்தாபனத்தில் பங்குகொண்டு அம்பாளின் அருள்பெறுக. இப்புண்ணிய கைங்கரியத்தில் தாங்களும் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு 0208 884 3333 / 0208 884 4333

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்
ஆலய சிவாச்சாரியார்கள்

-தெய்வீக திருப்பணியில்
இந்த தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)

61-65 Church Lane, Edmonton, London - N9 9PZ / www.ambaal.org / info@ambaal.org

133


4G NOW AVAILABLE

**Lycamobile**
Call the world for less

Special rates with UK plan

# Sri Lanka

# 3p /min

Landline + Mobile

## 500 UK Minutes
+
## Unlimited Data
## Unlimited UK texts

Unlimited calls and texts from Lycamobile to Lycamobile



£15 /30 days
To buy: Text 11244 to 3535

Order your free SIM at www.lycamobile.co.uk or call 020 7132 0322

Top-up your SIM online or where you see the following signs:

Lycamobile's Special International rates for UK plans customers offer ("the offer") is valid for calls from the UK to standard international landline and mobile numbers only and for customers with the £10, £12, £20, £30 or £40 UK plans (not the £5 or £7.5 plan). Promotion valid from 06-04-2014 to 31-05-2014. Lycamobile UK Plan ("the offer") inclusive allowances are for calls and texts from the UK to standard UK landline (starting 01 02 or 03) and other UK mobile numbers, and for mobile internet usage in the UK. Other usage will be charged at standard rates. Mobile internet allowance for the UK PLAN 5 7.50 10 12 20 30 40 includes 50MB, 500MB, 1GB unlimited 2GB 3GB 5GB respectively. Allowances are valid for 30 days from the date of purchase. Unlimited usage is subject only to a variation of speed from 4G/3G to 2G for usage beyond 10GB per month per SIM. 4G availability is subject to handset model and location. Calls are rounded up to the nearest minute for the purpose of calculating remaining allowances. A customer may have only one offer on their account and may not buy another during the 30 day validity period. Any remaining allowance after 30 days will not be carried over into the next 30 day period should the customer repurchase their bundle. Lycamobile reserves the right to replace or amend the offer or these Terms & Conditions or to withdraw the offer at any time on reasonable notice. Note that promotional credit (credit which Lycamobile has given to customers for free) cannot be used towards purchasing a bundle. The offer is for non-commercial, private, personal use only - Lycamobile reserves the right to withdraw or suspend the offer or to disconnect you if we suspect that offer is being used for commercial purposes, for conferencing, or if it is not being used in a handset (in a SIM box for example), if it is being used for tethering or if any reason Lycamobile reasonably suspects that you are not acting in accordance with this policy where we consider that the usage was illegitimate. Promotional period: the offer is valid from 01 04 2014

TESCO
ASDA
Martin McColl
Sainsbury's
WHSmith

Lyca mobile
Call the world for less